

# கனவும் அதன் பொருளும்

எம்.ஐ.எம். அபூபக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும்

# அதன்

# பொருளும்

எம். ஐ. எம். அபூபக்கர்

(இந்நூலின் இறுதியில் "துடி நூல்" எனும் பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது)

வெளியிடுவோர்:

எம். ஐ. எம். அபூபக்கர் அன் சன்ஸ்

187, செயிலான் வீதி, கல்முனை - 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1988
பதிப்புரிமை: ஆசிரியருக்கே
அச்சிட்டோர்; பிறஸ் டெக்னிகா,
சாய்ந்தமருது.

# சமர்ப்பணம்

"கனவும் அதன் பொருளும்"
எனும் இச்சிறு நூலை
பத்துத் திங்கள் சுமந்து
பல்துயர் அனுபவித்து
ஈன்றெடுத்து நாமகரம் சூட்டி
நல்லாசானாய்க் கண்டு ஆனந்தங்
கொண்ட எனதன்னைக்கு இதய
பூர்வமாக சமர்ப்பிப்பதில்
களிப் பேருவகை அடைகிறேன்.

விலை; ரூபா 16 : 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இறைவன் தன் பிரதிநிதியான மனிதனுடன் தொடர்பு கொள்ளும் வழிகள் பலவாயினும் முக்கியமான வழிகள் இரண்டு, ஒன்று வஹி (தெய்வ வழிபாடு) இரண்டாவது கனவு. வஹி நபிமார்களுக்கு சொந்தமானது. ஆனால், கனவோ அவன் அடியார்கள் அனைவருக்கும் பொதுவானது, இறைவன் கனவின் மூலமே சுபசோபனங்களையும் எச்சரிக்கைகளையும் அடியார்களுக்கு அறிவிக்கிறான். ஒன்றை திட்டமிட்டு ஆக்கியவன் அதன் செயற்பாடு வழி முறைகளையும் கற்பிக்காமலா விடுவான்? அதற்காகவே வேதங்களையும் தூதுவர்களையும் அனுப்பினான். அவை முடிவுற்று விட்டன. ஆனால் கனவோ யுக முடியும் வரை இருந்து கொண்டே இருக்கப் போகிறது.

கனவை ஒருவர் சரிவர விளங்கி செயலாற்று வாராயின் அவர் ஓர் உயர் உத்தமராகத்தான் இருப்பார். ஏனெனில் உலக ஆன்ம நடைமுறைகளை செவ்வையாக நடத்த கனவு அருந்தொண்டு ஆற்றுகிறது என்பது பலருக்குத் தெரியாது. கனவை கனவுதானே என்று அசட்டை செய்து விடுகிறார்கள். அந்தக் கனவுதான் மனிதனின் பிறப்பு, இறப்பு, உயர்வு, தாழ்வு, வெற்றி, தோல்வி, செல்வம், தரித்திரம் முதலிய அம்சங்களை எல்லாம் கட்டுப்படுத்தி விளக்கி கொண்டிருக்கும் ஒரு கருவியாக மனிதனில் பொருத்தப்பட்டுள்ளது என்பதை யாரும் உணர்ந்து பார்ப்பதில்லை.

இவர்களை கனவின் உண்மையை உணரச் செய்து பயன் பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவும் இன்று கனவுக்கு பொருள் கூறும் மனிதர்களோ நூல்களோ அருகி விட்டன; அந்தக் கலையே அழிந்து போகும் நிலையில் உள்ளதால் அதற்கு புத்துயிரூட்டி மெருகு கொடுத்து ஒவ்வொரு இல்லத்திலும் அதை கொலு வீற்றிருக்கச் செய்ய வேண்டும் என்ற நன்நோக்கோடு எனக்கு இதனை ஆக்குவதில் ஏற்பட்ட சிரமங்களையும் பொருட்படுத்தாது உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்வெய்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் இறுதி விசுவாசமான "அவனன்றி அணுவும் அசையாது" என்ற கொள்கைக் கேற்ப இந்நூலின் பிற்சேர்ப்பில் "துடிநூலை" யும் சேர்த்தளித்துள்ளேன். ஒவ்வொன்றும் காரணகாரியத்தோடுதான் செயல்படுகிறது. எனவே, மனித உறுப்புக்கள் இதற்குப் புறநடையானவை அல்ல என்பதை அறியச் செய்கிறது இச்சிறு பகுதி.

## கனவு பற்றி சில விளக்கம்

நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் பஜ்றுத் தொழுது முடிந்ததும் சூழ இருக்கும் தோழர்களை நோக்கி 'உங்களில் யாராவது இன்றிரவு கனவு கண்டீர்களா' என வினவ, தோழர்களோ கண்ட கனவுகளை உரைப்பார்கள் விளக்கம் கொடுக்கப்படும் பின்னர் தாங்கள் கண்ட கனவுகளைப் பற்றி விளக்குவார்கள். இப்படி வழமையாக அடிக்கடி நடந்து வந்தது. இது ஒரு (வீண சம்பவம் என்றிருந்தால்) பயனற்றதாக இருந்தால கனவைப்பற்றி விளக்க அதில் நேரத்தை கழிக்க விளைந்திருப்பார்களா என ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். கனவு மனித வர்க்கத்துக்கு எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பொன் மொழிகளே சான்று பகரும்.

1. கனவு நுபுவத் (நபித்துவம்) தின் 1/46 பங்கு.

2 "நுபுவத் (தூதுத்துவம்) முடிந்து போயிற்று ஆனால் நன்மாராயங்களும் சுபசோபனங்களும் பாக்கியாக இருக்கின்றன."

'நன்மாராயம் என்றால் என்ன?' என வினவ "எவர் தன் கனவிலோ பிறர் கனவிலோ நல்ல நிலையிலே தன்னைக் கண்டால் அவருக்கு நன்மாராயமும் சுபசோபனமும் உண்டாகும்,, என்றனர்

3. சாலிஹான கனவை நம்பாதவன் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பாத (நிராகரிப்பவன்) வன் போலாவான். என்றனர்.

எனவே, இப்பொன் மொழிகளே போதுமானதாகும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருக்குர்ஆன் ஞானமே கனவுக்கு அவசியம்

ஒருவர் ஈயை கனவில் கண்டால் இறைவன் குர்ஆனில் ஈயைப் பற்றி என்ன கூறியுள்ளான் என முதலில் அறிய வேண்டும். பின்னர் பொருள் கூற வேண்டும். ''ஈயை பற்றி உதாரணம் கூறவும் அல்லாஹ் வெட்கப்படமாட்டான் என்று திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது. எனவே; அவன் படைப்புகளில் ஒரு தாழ்ந்த படைப்பு என்பது புலனாகிறது. ஆகவே; அதனை கண்டவனும் அத்தன்மையினன் எனக் கொள்ளப்படும்.

இன்னொருவன் யானைக் குட்டியை பெற்றுக் கொள்ள கனவு கண்டான் என வைத்துக் கொண்டால் குர்ஆனில் அல்லாஹ் யானை பற்றி சூறத்துல் பீலில் கூறப்படும் நிகழ்ச்சியைக் அவதானித்தால் அரசாங்கத்தைப் பற்றி அது குறிப்பிடுவது புலனாகும். எனவே யானைக்குட்டியை பெற்றவன அரசாங்கத்தில் நின்றும் ஒரு சிறு உத்தியோகம் உதவிகளை பெற்றுக் கொள்வான் எனப் பொருள் கொள்ளப்படும். இது போல் பிறவும்.

கனவுக்கு பொருள் கூறுவது ஓர் அருட் கொடை. அது எல்லாருக்கும் வாய்ப்பதில்லை. பொதுவாக எல்லாத் தீர்க்கதரிசிகளும் அதில் நிபுணத்துவம் பெற்று விளங்கினார்கள். அதிலும சரித்திரத்தோடு பின்னி சிறந்து விளங்கியவர் தான் ஹஜரத் யூசுப் (அலை) அவர்கள். அதே போல மேதைகள் இமாம்கள் வரிசையில் சிறந்து விளங்கியவர் தான் இமாம் முஹம்மது இப்னு சீரின் றஹ்மத்துல்லாஹி அவர்கள். இவர்களுக்கு நிகர் இவர்களே; நபி பெருமானாரின் உம்மத்தினரில் கனவுக்கு பொருள் கூறும் மேதையாக கொடிகட்டிப்பறந்தார்கள்

இவர்களின் இவ்விசேடத்துக்கு காரணம் இவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அதில் ஹஜரத் யூசுப் (அலை அவர்கள் தாங்கள் சட்டையை இப்னு சீரின் (றஹ்) அவர்களின் மேனியில் போர்த்தி விட்டார்களாம்; அதன் பிறகே இவர்களுக்கு இம்மகாத்மியம் மிளிரத் தொடங்கியது. இவர்கள் ஹஜரத் ஹசன் பஸரீ (றஹ்) காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் கூறிய பொருள் எதும் பிழைத்தோ தவறியோ போனது இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் இவர்கள் பொருள் கூறிய சில புதுமையான கனவுகள் சிலவற்றை கீழே தருவது சிறப்பாக அமையும் என நம்புகிறேன்.

1. ஒருவர் தன் கனவிலே நான் 'பாம்பு, தேள் நட்டுவக் காலிகளைக் சுமக்கக் கண்டேன். இதன் தஃபீர் என்ன?' என்று கேட்டார்.

அதன்பொருள் 'நீர் இன்றிலிருந்து மக்களின் பகையை உழைக்கும் அடியானாக மாறப்போகிறீர்' என்றார்கள். அதற்கு அம் மனிதன 'நான் இன்றிலிருந்து சக்காத் வசூலிக்கும் ஊழியனாக நியமனம் பெற்றுள்ளேன்' என்றான்.

2. இன்னொரு மனிதன் வந்து, 'பளிங்குப் பாத்திரம் ஒன்றில் நீர் இருந்து கொட்டியது ஆனால் அப்பாத்திரம் வானத்தளவில் கொழுவப்பட்டிருந்தது. இதன் பொருளென்ன?' என்று கேட்டான.

'உன் மனைவி கருப்பனியாக இருக்கிறாளா? என்று வினவினார்கள். ஆமென்றான் அம்மனிதன், அப்படியானால குழந்தை உனக்கு கிடைக்கும். அது ஜீவித்திருக்கும், ஆனால் உன் மனைவியோ மரணித்து விடுவாள்' என்றார்கள். அப்படியே நடந்தது.

3. என் புத்திரன் என் புயத்தை கறுப்புக் கயிறு கொண்டு கட்டக் கண்டேன். இதன் பொருளென்ன' வென்று கேட்டான் ஒருவன்.

அதற்கு இமாமவர்கள் 'உன் புத்திரன் உன் கடன் தொல்லைகளையெல்லாம் நீக்கி உன் காரியங்களில் மிகுந்த உதவியாளனாக இருப்பான்' என்றார்கள்.

4. ஒரு மனிதன் இமாமிடம் வந்து 'நாயகமே நான் கனவில் முட்டையின் வெள்ளைக் கருவை எடுத்துக் கொண்டு மஞ்சட் கருவை வீசக் கண்டேன். இதன் பொருளென்ன' என்று கேட்டான்.

அதற்கு இமாமவர்கள் 'இவனை காதியாரிடம் பிடித்துக் கொண்டு போங்கள். இவன் கபன் துணி கள்வனாக இருக்கும் என்றார்கள். பின்னர் குற்றத்தை ஒத்துக் கொண்டு இனி அதைச் செய்ய மாட்டேன்' என்று அவர்கள் கையிலேயே தௌபா செய்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒருவன் பளிங்குப் பாத்திரத்தில் எறும்பூரக் கண்டேன். இதன் பொருளென்ன வெனக் கேட்டான்.

உன் மனைவியை தலாக்கு சொல்லிப்போடுக என்றார்கள். (அதன் பொருள் அவள் விபச்சாரி என்பது)

6. சாக்குருவியொன்றை மூன்று முறை அறுக்க முயன்று நாலாம் முறை அறுத்தேன். இதன் பொருளென்ன என்று கேட்டான் ஒருவன்.

அதற்கு இமாம் சொன்னார்கள்: நீ உன் மனைவியை ஜிமாஉக்குமூன்றுமுறைமுயன்று தோல்விகண்டுநாலாம்முறை நிறைவு செய்தீர் சரியா? என்று கேட்டார்கள். ஆமென்றான். பின்னர் இன்னும் கொஞ்சம் பொருள்சொல்லவேண்டி இருப்பதால்கிட்ட நெருங்கிவா என்றார்கள். கிட்ட நெருங்கிவந்தான் அம்மனிதன் அப்போது இமாம் சொன்னார்கள், உன் ஜிமாஉவின் போது காற்றுப் பறிந்ததல்லவா? என்றார்கள். அவன் வெட்கித்து எழுந்து சென்றான்.

7. நான் பிரயாணியாக வரும் போது ஒரு கனவு கண்டேன். அதில் இரு எருமைகள் மோதிக் கொண்டன. அதில் இரத்தம் படக் கண்டேன். என் மனைவியில் எனக்கு வெறுப்புண்டாகிறது. இதன் பொருள் என்ன என்று கேட்டான் ஒரு மனிதன்.

நீர் உன் மனைவியை வீணில் சந்தேகம் கொள்ள வேண்டாம். அவள் நீர் பிரயாணத்தில் இருந்து வருகிறீர் என அறிந்ததும் தன்னை தூய்மை செய்து அழகு படுத்த நினைத்து முடி களைந்த போது அவள் குறியில் இரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது போய் அறிந்து கொள் என்றார்கள் அப்படியே இருந்தது.

எனவே தஃஸீர் சொல்லும் ஒருவர் குர்ஆன் ஹதீஸில் போதிய விளக்கமும் ஞானமும் உடையவராகவும் சமயோசிதமும் நிதானமும் உடையவராக பொருள் கூறக் கற்றுக் கொள்ள வேண்டும். இன்றேல் விபரீதப் விளையும். இதற்கு ஒரு சிறு சம்பவத்தைக் குறிப்பிடுவது நலம் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் விழக்கனவில் கண்டால் குடும்ப அங்கத்தவரில் ஒருவர் இறந்து விடுவார் என்று பொருள். ஒரு முறை ஒரு மன்னன் ஒரு தஃபீர் கூறும் ஒருவரை கூப்பிட்டு 'நான் எனது பல் முழுவதும் விழுந்து விடக் கனவு கண்டேன். இதன் பொருள் என்ன? என்று' கேட்டான் அதற்கு அந்த மனிதன் 'உன் குடும்பத்தினர் அனைவரும் இறந்துவிடுவார்கள்' என்றான் அதற்கு அந்த அரசன் அவன் தலையை வெட்டும் படி கட்டளை இட்டான்.

இன்னும் ஒருவரை அழைத்து மேற்படி கனவைச் சொன்ன போது அவர் சமயோசிதமாக பதில் சொன்னார். 'உமது குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரிலும் நீயே வயசு கூடியவன்' என்றார். இதனைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து அவனுக்கு பொன்னும் பொருளும் பரிசாக வழங்கி அனுப்பினான்.

எனவே இதில் இருந்து விளங்குவது என்ன? கூறும் முறையால் பின்னவன் பரிசு பெற்றான் முன்னவன் தண்டனைக் குட்பட்டான். ஆனால் இருவரும் கூறிய பொருள் ஒன்றுதானே! அல்லவா?

## கனவுக்கே ஒரு மலக்கு

கனவுக்கே ஒரு மலக்கை இறைவன் பொறுப்பாளியாக நியமித்துள்ளான். இவரை 'மலக்குல்ருயா' (கனவின் அமரர்) என்று காரணப் பெயராலும் 'றூஹ்' என்னும் இயற் பெயராலும் அழைக்கப்படுகிறார். முக்கியமில்லாத பகுதியானால் அமரரும் இதற்கு தேவையா?

எனவேதான் இவ்வமரர் மனித வாழ்வின் பிறப்பு, இறப்பு, வாழ்வு, தாழ்வு, நலவு, தீங்குகளையும் உணர்ந்து நிலைமைக் கேற்ப நன்மாராயமாகவும் எச்சரிக்கையாகவும் கனவுகளை காட்டிக் கொண்டிருக்கிறார். அதனை விளங்கிச் செயல் பட்டால் தீங்குகளை தவிர்த்துக் கொள்ளவும் நன்மாராயங்களால் மகிழ்வுறவும் உதவியாக அமையும். இதற்காக கனவின் பொருள் கூறுபவர்களையோ அல்லது நல்ல கனவின் பொருள் கூறும் நூலையோ [illegible] வைத்திருப்பது பெருந்துணை புரியும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு குர்ஆனுடன் தொடர்புடைய ஒரு சம்பவத்தை தருவது பொருத்தமாக அமையும் என நம்புகிறேன்.

ஹஜரத் யூசுப் (அலை) அவர்கள் காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னன் ஒரு கனவு கண்டான். அதில் ஏழு மெலிந்த மாடுகள் ஏழு கொழுத்த மாடுகளை விழுங்கி விடக் கண்டான் இதனை பலரிடம் கூறியும் நல்ல பொருள் கிடைக்கவில்லை கடைசியாக யூசுபு (அலை) அவர்களிடம் பொருள் அறிந்தான் அதன் படி அக்கனவின் பொருள் ஏழு மெலிந்த மாடு பின்னர் வரும் ஏழு பஞ்சமான வருடம் ஏழு கொழுத்த மாடு பின்னர் வரும் ஏழு செழிப்பான வருடம் எனவே செழிப்பான ஏழு வருடமும் தானியங்களை விளைவித்து சேமித்து வைத்து பின் வரும் பஞ்சமான வருடத்தில் அதனை பங்கீடு செய்ய வேண்டுமென்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட மன்னன் வியப்படைந்து நிர்வாகப் பொறுப்பை யூசுப் (அலை) யிடமே கொடுத்தான் அவர்கள் ஏழு வருடமும் பெரிய தானியக் களஞ்சியங்களை அமைத்து விளைச்சலை சேமித்தார்கள் பின்னர் வந்த பஞ்சமும் வரட்சியும் நிறைந்த ஆண்டு ஏழையும் விட்டும் மக்களைக் காத்தார்கள் என அறிகிறோம். இச்சரித்திரமே கஷ்டத்தில் இருந்து காத்துக் கொள்வதற்கு கனவின் பொருள் அறிந்திருப்பது அவசியம் என்பதற்கு சான்றாகும்.

## கனவுகள் யாவும் பலிக்கின்றனவா?

இல்லை. கனவுகள் யாவும் அவை காணும் காலம் நேரத்தை பொறுத்தே பயனளிக்கின்றன. ஏனையவை பயனளிக்க தாமதிக்கின்றன கனவில் சில உடனேயும் சில சுணங்கியும் மற்றும் பல வருடங்கள் கழித்தும் பலனளிக்கின்றன.

ஆதம் (அலை) கனவு கண்டு விழித்தார்கள். இறைவன் அவர்களை விளித்தான். ஏ: ஆதமே உன் அருகில் இருப்பது யார்? என வினவினான்? அதற்கு ஆதம் இவர் அவ்வா சற்று முன் என் கனவில் கண்டேன் என்றார்கள். இது உடனே பலிக்கும் கனவுக்கு உதாரணமாகும்.

இப்ராஹிம் (அலை) தனது மகனைப் பலியிடக் கனவு கண்டார்கள் உடனே அதனை நிறைவேற்ற முயற்சித்தார்கள்; இது சற்று தாமதித்ததற்கு உதாரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமோர் உதாரணம் உரோமபுரிச் சக்கராதிபதி பாராளுமன்றத்துக்கு செல்ல முயன்ற போது அவன் மனைவி குறுக்கிட்டு நீர் இன்று பாராளுமன்றம் செல்ல வேண்டாம், நான் இரவுகூடாததிய கனவுகள் கண்டேன் என்றுதடுத்தாள், கதறினாள்; கதறினாள். அவை அவன் செவிக்கேறவில்லை சென்றான் முடிவென்ன? படுகொலை செய்யப்பட்டான் இது சரித்திரம் கண்ட உண்மை.

ஹஜரத் யூசுப் (அலை) அவர்கள்ஒரு கனவு கண்டார்கள். அதில் ''சூரியனும் சந்திரனும நட்சத்திரங்களும் வந்து என்னைச் சுஜூது செய்தன'' என தனது தந்தையாகூப் (அலை) அவர்களிடம் கூறினார்கள். நீர் இக்கனவை உன் சகோதரரிடம் கூறுதீர். மேலும உமக்கு தந்தை, தாய் சகோதரர்கள் பதினொரு பேரும் உன் பாதம் பணிவார்கள் நீர் சீரும் சிறப்புமுள்ள வாழ்வு வாழுவீர். என தந்தை கூறினார்கள் அது நிறைவேற சுமார் 20 வருடங்களுக்கு மேல் சென்று விட்டன. இது சரித்திரம் காட்டும் அழகிய சம்பவம்.

## கனவு காணும் காலம்

கனவு காணும் காலத்தைப் பொறுத்து அதன் பொருள் வேறுபடுகிறது. கோடையில் காணும் கனவும் மாரியில் காணும் கனவும் பொருளால் வேறுபடும் அதே போல் சூரிய உதயம் பஜ்ருக்கு பின், உச்சியில் நேரம், அஸ்தமன காலம், தொழுகை நேரங்கள் போன்ற நேரங்களில் எண்ணம் கோவையாக திரண்டு பல நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்துக் காட்டும் அதில் செய்த்தானின்சேட்டைகளும் கலந்துகாணப்படும் ஜுனுபாளியாக உள்ளவரின் கனவும் அவ்வாறே. எனவே அவற்றிற்கு பொருள் அறியத் தேவையில்லை பகலில் காணும் கனவும நள்ளிரவுக்குப் பின் பஜ்ருக்குள்ளாக காணும் கனவுகளும் சிறந்தவை.

எமது உள்ளம் தற்போது எதில் வயப்பட்டிருக்கிறது நம் உள்ளத்தின் நிலை என்ன என்று அறிய பஜ்ருக்குப்பின் விலாவை புவியில் கிடத்திசற்று உறங்கிப்பாருங்கள் அந்நேரம் மனநிலையை விளக்கும் கனவுகள் வருவதை காணலாம் அதைக் கொண்டு நம்மை நாம் திருத்திக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவே ஒரு மருத்துவன்

கனவு சில சமயங்கள் மருத்துவனாக அமைந்து மருந்து சொல்லித் தருவதும் உண்டு. இதற்கு அநேக சம்பவங்கள் சான்றாக இருந்த போதிலும் சிலதை இங்கு தருவோம்.

1. நீண்ட நாளாக சூலைநோயினால் வேதனைப்பட்டு வந்த ஒருவர் தனது கனவிலே ஒரு பெரியார் வந்து "நீ நாரையிரலை சமைத்து உண்டுவா" என அறிவித்துச் சென்றார். அதன்படி செய்ய அந்நோய் அவரை விட்டும் நீங்கிவிட்டது. இதுவரை சுகதேகமாயிருக்கிறார்.

2. இன்னுமொருவர் நீரழிவினால் மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார். அவருக்குக் கறிவேப்பிலையை அரைத்து கற்கண்டு சிறிது சேர்த்து உண்ணும்படி ஒரு மனிதர் வந்து கூறினார். இன்றது தான் காலைதோறும் தினமும் ஊசிமருந்து ஏற்றி வந்தவர் இன்று சந்தோசமாக காணப்படுகிறார்.

3. தீராது இது என வைத்தியர்கள் பலரால் கைவிடப் பட்ட ஒரு நோய். இனி விடிவே இல்லையென மரணத்தை எதிர்பார்த்திருந்த ஒருவருக்கு, ஒரு பச்சையுடையணிந்த வைத்தியர் போன்றொருவர் தோன்றி புகாரி சரீப் ஓதும் காலத்தில் தபர்ரூக் உணவு ஆக்கி அதைப் புசியும் உன் நோய் தீரும் எனவும் கூறிமறைந்தார். விழித்துப் பார்க்க அது புகாரி சரீப் ஓதும் காலமாகவே இருந்தது. சொன்னது போல் செய்தார். நோய் சொஸ்தம் அடைந்தது.

4. தீராத வியாதிக்கு குறித்த வைத்தியரிடம் செல்லும்படியான அறிவித்தல்கள் கிடைத்து நோய் தீர்ந்த சம்பவங்களும் உண்டு.

மேலும் கனவு கண்டு கதைப்பவரைக் கண்டால் அவருடன் கதைத்து சில நல்ல தகவல்களைப் பெறலாம். அவருடன் பேசும்போது அவர் கதைப்பதைமுறியாமல் தொடர்பு கொண்டு கதைத்துப் பாருங்கள் புரியும்.

சந்திர கணிப்பு பிறை 13, 21, 22, 24, இல் காணும் கனவுகள் நன்மையோ தீமையோ உடனே பலனளிக்க வல்லன நன்மையை மட்டும் விரைவில் வழங்க வல்ல கனவுகள் பிறை 6, 7, 8, 9, 10, 15, 16, 19, 21, 26, 27, 30, ஆகிய திகதிகளில் காணப்படுபவை. பிறை 4, 5, 11, 12, 17, இல் காணப்படும் கனவுகள் பலன் தாமதமாகி வழங்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனவின் பிரிவுகள்

நப்சானிய்யா: இது நினைவுகள், எண்ணங்கள் யாவும் உருவெடுத்து வருவது. எண்ணத்திற்கு இது தக்க சான்றாக அமைந்துள்ளது. எண்ணமும் எண்ணங்களும் நடந்த நிகழ்ச்சிகளும் தொடர்புடனோ தொடர்பற்றோ தொகுத்துக் காட்டும் கனவே இது. ஆசைகள் வடிவம் எடுக்கும்.

இதில் பேச முடியாது இருப்பது. ஓட ஓட. ஓட முடியாது காண்பது, இச்சை கொண்டவற்றை அழகு படுத்தியோ அதிகமாகவோ காட்டுவது இந்த நப்சானிய்யாவை சேர்ந்த கனவுகள்.

இதில் வெளியே நடக்கும் பஞ்ச பல உணர்வுகளையும் தொகுத்து உள்ளே கனவாகக் காட்டும் உதாரணம் நீர் உடலில் பட்டால் கனவில் குளிப்பது போலவும் ஒருவர் கூப்பிட்டால் அல்லது ஒலி பெருக்கி நிஜவாழ்வில் பாடக்கேட்டால் அது கனவுலகில் ஒலி பெருக்கியில் பாடுவதுபோலவும் படுக்கையில் உடலில் ஏதும் குத்தினால் பாம்பு நாய் கடிப்பது போலவும் காட்சி வழங்கும். இவைகளை கொண்டு பலன் அறியத் தேவையில்லை.

செய்த்தானிய்யா: இது செய்தானின் தொடர்பால் காட்டப்படுவது, இதில் பயங்கரமான உருவங்கள் பயங்கரமான இருட்டு, இருட்டறை குத்து வெட்டு இரத்தக் களரிகளைக் காட்டும் துரத்துவது பிடிப்பது போன்ற தோற்றங்களும் இதில் அடங்கும். மோசமான அருவருப்பான காட்சிகளையும் காட்டும். சிற்றின்ப எண்ணங்களுக்கு மெருகூட்டி உணர்வை தூண்டி விடவும் காரணமாக அமைவது செய்த்தானிய்யா கனவுகளே.

மலக்கானிய்யா: இது மலக்குகளை கொண்டு உண்டாகும். கனவு இது மிகவும் அழகான காட்சிகளையும் தெளிவான உருவங்களையும் காட்டும். கனவுகாணும்போது மனம் இரம்மியமாகவும் சாந்தியாகவும் இருக்கும். இதில் அமரர், நபிமார் சுவனம் போன்ற உயர்காட்சிகள் எடுத்துக் காட்டப்படும். மற்றது இக்கனவு இலேசில் மறந்துபோவதும் இல்லை நோய்வாய் பட்டவர்களுக்கு மருந்துகளும் அறிவிக்கப்படுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெப்பானிய்யா: இது இறைவன் புறத்திலிருந்து வெளிப் டுவது இ னெ நபிமார், வலிமார் கண்டு களிப்பர். இது வஹியை ஒத்தது. இதன் கட் ளைகள் எடுத்துச் செயல்படுவது (நபிமார்களான) அவர்களுக்கு கட்டாயம்

தீய கனவுகள் கண்டால்: தீய கனவுகள் கண்டவர் விழித்துப ர்த்தா ல பெரு பாலும் இடது புறமோ குப்புறப் படுத்திருப்பதைக் கா ணலாம். எனவே தீய கனவு கண்டு விழித்தவுடனே இடது புறம் மூன்றுமுறை உமிழவும் பின் வலது புறமாக திருப்பிப் படுக்கவும் படுக்கு முன் சூறத்துன் நாஸ் சூறத்துல் பலக் இரு அத்தியாயங்களையும் ஓதிக் கொள்ளவும் படுக்கு முன் மே கிப்லாவை நெஞ்சு நோக்கியவனாக அல்லது தலைப் றம் கிப்லா வுக்கு எதிர் நோக்கியவனாக வலப்புறம் சாய்க்கவும், முன் கூறிய அத்தியாயங்களை ஓதிக் கொள்வதுடன் ஆயத்துல்குர்ஸி என்ற ஆயத்தையும் ஓதி நெஞ்சில் ஊதிக் கொண்டால் சகல தீங்குகளை விட்டும் காக்கப்படுவீர்கள்.

# எனது நன்றி

எனது கன்னி முயற்சியும் முதல் வெளியீடுமாகிய "மாணவர் தமிழ் அகராதி" க்கு ஆலோசனைகளையும் சொற்களஞ்சியங்களையும் தந்து அதனை ஆக்குவதிலும் விநியோகிப்பதிலும் ஒத்தாசை தந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி!

எம். ஐ. எம். அபூபக்கர்

287, செயிலான் வீதி,
கல்முனை - 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை

விடயம் | பக்கம்


அகலமற்ற நெஞ்சு, அகிற்கட்டை, அசா, அசூசி, அட்டை, அடிமை, அடுப்பு, அத்தர், அத்தி, அந்நியன், அம்பு, --- --- --- --- 1

அரமி, அயல்வீட்டு குமரன், அரசன், அரிசி, அல்லாஹ், --- 2

அல்வா, அழகிய கிழவி, குமரி, அழகியகட்டில், புணர்ச்சி, அறியாத பறவை, ஹறம், ஹஜறுல் அஸ்வத், முட்டை, --- 3

ஹஜ்ஜு, ஆகாயம், ஆகாய மிருகம், ஆகுமான பிராணியை அறுக்க, ஆடு, --- --- --- --- 4

ஆடை, --- --- --- --- 5

ஆண்குறி, ஆணம், ஆந்தை, ஆப்பிள், ஆப்பு, ஆமை, பாடசாலை, ஆலிம், ஆள்காட்டி, ஆறு, --- 6

இடி, இமாம், இரத்தம், இராத்திரி, இராஜாளி, இதயம், இரும்பு, இருள், இலேச்சாறு, இறைச்சி, --- --- 7

ஈசல், ஈட்டி, ஈத்தம் பழம், ஈ, ஈரல், உடும்பு, உண்ணும் விரிப்பு, உணவு கழுத்தில், உதடு, உப்பு, உபதேசம், உயிர் பிராணியை வெட்டினால், --- --- 8

உரத்த சப்தம், உருவப் படம், உரொட்டி, உழுசெய்தால், ஊசி, ஊஞ்சல், ஊமை, எண்ணம் நிறைவேற, எதிரி, எலி, எலுமிச்சை, --- --- --- --- 9

எலும்புகண்டனம், பேனா, எழுது, எள்ளு, எறும்பு, ஏசினல், ஏறுநெற்றி, ஐஸ், --- --- --- 10

ஒட்டகம், ஒளி, ஓநாய், --- --- --- 11

ஔழூ, கஃபா, கட்டில், கட்டிடம், கடன், --- --- 12

கடிவாளம், கடிதம், கடைவீதி, கண், --- --- 13

கண்ணாடி, கத்தரிக்காய், கத்தரிக்கோல், கஸ்தூரி, கப்பல், கப்று, கயிறு, --- --- --- 14

கரடி கரி, கரும்பு, கருப்பனி ஆண் பெறக்கண்டால், கல், கல்விபயில, கவலை, கழுதை, கழுத்து அறுபட --- 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுதை, கற்கண்டு, கற்பூரம், கற்கொத்தி, கன்னி,
அறைந்தால், --- --- --- --- 16

காக்கை, காடு; கால், காலணி, காற்று, --- --- 17

கிணறு; கியாமத், கிளி, கிறிஸ்து ஆலயம், கீரி, குங்குமப்பூ,
குடல், குதிரை, --- --- --- --- 18

குதுபா, குர்ஆன், --- --- --- --- 19

குர்பான், குரங்கு, குருடனுக்கு, குழல், ஊத, குள்ளன்,
குளவி, குளிக்க, குற்றவாளியாக, --- --- 20

குறுமடம், கூசா, கூரிய ஆயுதம், கை, கைலேஞ்சு,
கொக்கு, கொசு, கொடி, கொண்டை கிளர்த்திகுருவி,
கொலை புரிய, கொலைசெய்வதை, --- --- 21

கோட்டை, கோதுமை, கோழி, கௌதாரி, சக்காத்,
சகதி, சங்கிலி, சத்தியம் செய்ய, சந்ததி, --- --- 22

சந்திரன், சந்தனம், சம்சம் நீர், சம்பளம், சமாதானம்,
சர்பத், சல்லடை, சலாம் கூற, சவர்க்காரம், சவரன்,
சன்னல், சன்மானம், --- --- --- 23

சாக்குருவி, சாம்பல், சாம்பிராணி, சாயம், சாயக்கூடு,
ஜாலம் சிகிச்சை, சிங்கம், சிட்டுக் குருவி, சிநேகன்;
சிரச்சேதம், சிம்மாசனம், சிரிப்பு, சிலந்தி, சிவப்புக் கல்,
சிறு புத்திரன், --- --- --- --- 24

சிறு புத்திரி, சிறுநீர், சிறைப்பட, சிப்பு, சுடுநீர், சுர்மா;
சுரை, சுவர்க்கம், சுருட்டிய கிநாபு, சுவர், --- --- 25

சூரியன், செங்கல், செம்புப்பாத்திரம், செய்த்தூன் நெய்,
செய்த்தான், செவி, --- --- --- 26

சேணம், சேவல், சேறு, சேனை, சொக்கட்டான், சோறு,
அரிசி, தங்கம், --- --- --- --- 27

தட்டை, தண்ணீர், தபேலா, தயிர், தர்மம், தரகன்,
தலாக், தலையணை, தலைப்பாகை, --- --- 28

தலை, தவளை, தற்கொலை, தன்னை பலவானாக, தனம்;
தாகமாக; தாடி; --- --- --- 29

தாய், தந்தை, தாலி, தானியம், தான் அழிய, படுக்க;
தண்நிழல்; திராட்சைதிறப்பு; தீ முழுங்கி, --- --- 30

துப்பாக்கி துப்ப; தும்மல், தூக்கு மேடை; தேநீர்; தேவு;
தேன்; தொடை; தொழ; தோடை; தோள், நகம்; --- 31

நகலீல்; நகரா; நஞ்சு; நட்சத்திரம், நட்டுவக்காலி; நண்டு;
நந்தவனம்; நபிமார் --- --- 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள்; நரகம், நரி: நவரெத்தினம்; --- 33
நறுமணம் நாட்டியம்; நாணயம்; நாய்; நா;
நீண்ட அங்கி; நெய்; நெருப்பு; நெற்றி; நோன்பு;
பச்சைஇறைச்சி; பசி;பசு;பஞ்சு; படுக்கை;பரண்; பருந்து;
பருப்பு; பல்; --- --- --- --- 34
பள்ளி; பளிங்கு;பறவை;பன்றி;பனை;பஜித்தால்;பாக்கு;
பாடல்நூல்; பாதம்; --- -- --- 35
பாதரட்சை; பாதை: பாம்பு: பால்; பாலம்: பிணைநிற்க;
பித்தன்: பிரசங்கி: பிரசவ ருது: பிரயாணிகள்:பீரங்கி. --- 36
புகை; புத்தகப் பக்கம்: புதிய பாத்திரம்; புதை குழி
தோண்டினுல்,புருவம்,புல்; புலம்பல்; புலி: புழுதி;புறு, -- 37
பூட்டு: பூ; பூமி: பூனை; பெட்டகம்; பெட்டி; பெண்: --- 38
குறி, கை;சிறுநீர், பெண்ணுக்கு ஆண்குறி: போர்வை;
மகள்; மணல்; மது, மந்தை; மயில்; மரகதம்; --- 39
மரம்; மல்யுத்தம், மலஜலம்; மலை; மழை; புணர்ச்சி, --- 40
மாங்காய்: மாடு; மாடப்புறு; மாடி; மாதவிடாய்; --- 41
மாதுளை;மாப்பிள்ளை;மாலிக்;மாலை;மா;மான்;மிட்டாய்; -- 42
மிம்பர்: மிளகாய்: மிளகு: மின்னல்: மினு: மினுரா;
மிஹ்ராப்: மீன்; முகம்: முகமூடி: --- --- 43
முட்டை: மூடி: முத்தமிட: முத்து: முதலை: முதுகு;
முயல்; முள்ளம் பன்றி: --- --- --- 44
மூக்கு: மேகம்; மேட்டில், ஏற: மேளம், மோசக்காரி;
மோதிரம்; --- --- --- --- 45
மௌத்து: மௌத்தானவர்: -- --- --- 46
யானை: யுத்தம்; வச்சிரம், வண்டு: வயிரம்: வயிறு: --- 47
வயோதிகர்; வரிக்குதிரை: வலை: வழிகாட்டி:
வழிபறி: வாசனைத்தூபம்: வாத்து: வாந்தி:
வாலிபமகன்: வாலிபன் வயோதிகனாக: வாலிபன்
சிறுவனாக; வாள்: வான்கோழி: வானம்: -- --- 48
வானவர்: வானவில்: வித்திரகம்; விபசாரமனைவி கிழவி;
வித்து மருத்து, விபாதி:விபர்கவை, விரல்:விசிப்பு:விருந்து-- 49
விரோதி: வில்லை; விலா; விளாகம் செய், விளக்கு; வீடு;--- 50
--- --- --- 51
கதவு; மாடி: வெள்ளி, ---
வேட்டை, வேளாண்மை; வௌவால்; வௌவால்; --- 52
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் அதன் பொருளும்

அகலமற்ற நெஞ்சைக் கண்டால் :-- நண்பர்களால் நலன் பெறுவீர்.

அகன்ற நெஞ்சு தனக்கு :-- வீரதீரச் செயல் புரிவீர்; வெற்றிகள் கிடைக்கும் நன்மாராயம்.

அகிற கட்டை :-- நோய் கஷ்டங்கள் நீங்கும்; புகழ் கிடைக்கும்; செல்வம் சேரும்.

அசா (கைத்தடி) :-- ஏதோ ஒரு பகுதி மக்களின் தலைவராவீர்.

அசூசிகள் :-- ஹறுமான (விலக்கான) முதல்களையோ பாவமான செயல்களையோ குறிக்கும்.

அட்டை :-- சமூகத்தில் மிக மதிப்புக் குறைந்த மனிதனுக்கும்.

அடிமை, ஊழியனைக் கண்டால் :-- சிறப்பான வாழ்வு கிடைப்பதைக் குறிக்கும்.

அடிமையை விற்றால் :-- கஷ்டம் தொல்லைகள் அதிகரிக்கும்.

அடுப்பு :-- ஒரு பெண்ணால் எதிர்பாராத உதவிகள் கிட்டும்.

அத்தர் வியாபாரியைக் கண்டால் :-- அரசாங்க உதவிகள் கிடைக்கும்; உமது புகழ் எங்கும் பரவப் போகிறது.

அத்தர் தடவினால் :-- யார்க்கத்தில் உயருவீர்; யாவிலும் பிரபல்யமடைவீர்; உன் புகழ் உயரும்காலம் இது.

அத்தி மரம் :-- பொருள் பெருகும்; சந்தோச வாழ்வு உண்டாகும்.

அத்திப் பழம் உண்டால் :-- எதிர்பாராத வகையில் செல்வமும் சிறப்பும் சேரப் போகிறது; சிறப்பு அடைவீர்.

அத்தி இலை :-- நோயுண்டாகும்; அச்சமும் பீதியும் தொடரும்.

அந்நியன் உன் படுக்கையில் :-- வாணாள் கூடும் நற்செய்தி.

அந்நியன் படுக்கையில் நீ :-- விரோதமும் குழப்பமும் உண்டாகும் முன் எச்சரிக்கை.

அம்பைக் கண்டால் :-- வெற்றிகிட்டும்; எண்ணம்நிறைவேறும்; அல்லது ... பிரயாணத்தைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்பு எய்தால் :-- எண்ணம் நிறைவேறும். சந்தோசம் பெறுவீர். எதிலும் வெற்றி உண்டாகும்.

அம்பால் யுத்தம் செய்தால் :-- ஆயுள் கூடும். பகையை வெல்லுவீர்

அம்மியை கண்டால் :-- மக்கள் மதிக்கும் தொண்டராவீர்.

அம்மியை வெறுமனே அரைத்தால்:-- வீணான வார்த்தை பேசுவீர்.

அம்மியில் நீர் வடிந்தால் :-- உமது வாழுநாள் முடியப் போகிறது.

அம்மிக் குழவி :-- வார்த்தைச் சாதுரியமும் காரிய சித்தியும் உண்டாகும்

அயல் வீட்டுக் குமாரன் :-- தேவையற்ற சண்டை சச்சரவுகள் உண்டாகும்.

அரசனைக் கண்டால் :-- பதவிகள், செல்வம், சௌக்கியம் பெற்று நல்வாழ்வு வாழ்வீர்கள்.

அரசன் சிரித்தால் : - சந்தோச சமாச்சாரம் உண்டாகப் போகிறது.

அரசன் கோபித்தால் :- எதிர்பாரா கவலைகள் வர உள்ளன.

அரசனுடன் சேர்ந்து உணடால் :- ஆயுள் கூடும்; வர்த்தக முயற்சிகள் பெரும் பயன் நல்கும்.

அரசனுடன் சேர்ந்திருந்தால் ;- உற்றார் உறவினரை பிரிவீர்.

அரசன் கூடாத தலத்தில் இருந்தால் :-- உயிர் பொருள் சேதம் ஏற்படும்.

அரச முடி :- ஆண்களுக்கு சிறப்பும் மேன்மை ஏற்படும் கனவு.

அரச முடியை பெண் தரித்தால் :-- கணவனை பெற்றுக் கொள்வாள்.

அரிசி, சோறு, போன்றவற்றை கண்டால் :-- மிகமிக கஷ்டப் பட்டு முதல் சேர்க்கவும் சீவிக்கவும் நேரிடும்.

அல்லாஹ்வை கண்டால் :-- ஒளிமயமாகவோ வேறு ஜோதி களாகவோ கண்டால் நேர்வழியிலும் நல் விசுவாசத்திலும் இருக்கிறீர். அன்றேல் அது குப்ரியத்தில் நின்றும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் கேள்வி கணக்கு கேட்டான் : - பிரயாணியானால் பிரயாணம் விரைவில் முடியும். சந்தோசம் உண்டாகும்.

அல்வா / ரொபி போன்றவற்றை கண்டால் :-- செல்வம் பெருகி ஆனந்த சீவியம் நடத்துவீர். வாணுள் அதிகரிக்கும்.

அழகிய கிழவி :-- உலக வாழ்வு சிறப்பாக அமையும். மறுமையும் சிறப்பாக அமைய நற்காரியம் செய்க.

அழகிய குமரி :- சீரும் சிறப்பும் நிறைந்த வாழ்வுண்டாகும்.

அழக் கண்டால் : - பாவம் மன்னிக்கப்படும். சில சோதனைகள் உண்டாகித் தீரும்.

அழ, தொழ, ஆகாயம் பறக்கக் கண்டால் :- பாவம் தீரும்.

அழகிய கட்டில் :- அழகும் செல்வமும் நிறைந்த பெண் கிடைப்பதை அறிவிக்கிறது.

அறிந்த பெண் புணர்ச்சி :-- சீமானுகவும் மிகுந்த வாழ்வுக் காறனுகவும் ஆகுவீர்.

அறியாத பெண் புணர்ச்சி :-- வாழ்வில் அனேகா அனேக நன்மை கிட்டும் அறிவித்தல்.

அறியாத பெண் மடியில் :-- நிறப்பமான வாழ்வு பெறுவீர். இறைவனை அதிக துதி செய்து புகழ்ந்து வருக.

அறியாத பறவை :-- வானவர்களைக் குறிக்கும் கனவு இது.

அறியாத பறவை முட்டை :-- ஆகுமான முதல்கள் சேரவுள்ளது.

அறியாத முட்டையை பச்சையாக உண்டால் :-- ஓறுயான உணவை உண்பீர்.

அறியாத முட்டை கிடைத்தால் :- அழகிய பெண்ணைப் பெறுவீர்.

அறியாத முட்டை வெண்கருவை உண்டால் :-- இறந்தவன் முதல்களை உண்பீர், களவு செய்வீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹறமில் பிடிபடக் கண்டால் :— அச்சம் தீருவீர்; சந்தோசம் பெறுவீர்

ஹஜ்ஜருல் அஸ்வதை முத்திஞல் :— மார்க்க ஞானி ஒருவரின் ஆசீர்வாதம் கிடைக்கும்; துஆ கபூலாகும்.

ஹஜ் செய்யக் கண்டால் :— துஆ கபூலாகும்; அச்சம் தீரும்; நாட்டங்கள் நிறைவு பெறும்.

(.) ( ) (.)

ஆகாயத்தைக் கண்டால் :— ஆண் குழந்தை கிடைக்கும்; அதனுல் உன் புகழ் எங்கும் பரவப் போகிறது.

ஆகாயத்தில் நடந்தால் :— பாவத்தில் சிக்குவீர்; சில பழிசளும் வந்து சேரும்.

ஆகாயத்தில் பறந்தால் :— பாவம் மன்னிக்கப்படும்; வெளியூர் பிரயாணம் செய்வீர்; சத்முயற்சிகளை தொடர்க.

ஆகாயத்தை அடைந்தால் :— ஈருலக வாழ்வும் சிறப்புற விளங்கும்; உன் நீள் காரியம் உயர்ந்துள்ளது.

ஆகாயத்தில் மேகம் :— அரசாங்க நன்மைகள் சில கிடைக்கும்.

ஆகாத மிருகப் பால் குடித்தால் :— அச்சமும் நோயும் உண்டாகும்.

ஆகுமான மிருகப்பால் குடித்தால் :— ஹலாலான முதல்கள் வந்து சேரும்.

ஆகுமான பிராணியை அறுத்தால் :— உயர் அதிகாரிகளால் நன்மைகள் பெறுவீர்.

ஆட்டை கனவில் கண்டால் :— உமக்கு மிகுதி நன்மைகள் உண்டாகும் அறிவித்தலாகும்.

ஆட்டிறைச்சியை உண்டால் :— ஒரு பெண்ணை மணப்பீர்; காணுது போன பொருள் கைகூடும்; எதிர்பாராத புறத்தே இருந்து உணவு கிடைக்கும்.

ஆட்டின் பொரியலை உண்டால் :— கஷ்டத்துடன் பொருள் சேரும்.

ஆட்டுப் பாலைக் குடித்தால் :— வெகு விரைவில் ஒரு கஷ்டம் வரக்காத்துக் கொண்டிருக்கிறது; ஆனல் தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டைப் பெற்றுக் கொண்டால் :— ஒரு அழகியை பெறுவீர்.
ஆட்டை சுமந்தால் :— நண்பர்களினுல் செலவு அதிகரிக்கும்.
ஆட்டை பிடித்தால் :— பதவி அதிகாரம் முதல்கள் கிடைக்கும்.
ஆடு மேய்த்தால் :— ஒரு பகுதி மக்களின் தலைவராவீர்.
ஆடு காணுது போனுல் :— உன் மனைவி தவருக நடப்பாள்.
ஆட்டுக் குட்டி :— மகிழ்வும் மனநிறைவும் உண்டாகும்.
ஆட்டைக் கொன்ருல் :— பகைவனை வெல்லும் அறிகுறி.
ஆட்டுக் கறியை வெறுத்தால் :— குடும்பத்தினர் ஒவ்வொருவராக மரணிப்பர்.
ஆடறுப்பவன் :— உன் மரணம் சீக்கிரம் என அறிவிக்கிறது.
ஆடொரு தலத்தில் புகுந்தால் :— அங்கு மரணம் ஏற்படும்.
ஆட்டின் ஒரு உறுப்பை வாங்கினுல் :— விலை கொடுத்தால் நன்மை உண்டு; அன்றேல் தரித்திரம் பிடிக்கும்:
ஆட்டில் செம்மறி :— அநீதக்காரனுல் உதவி கிடைக்கும்.

ஆடையை கண்டால் :— ஆகுமான முதல்களாய் இருக்கும்.
ஆடை விழுந்தால் :— எதிர் பாராத வழியில் செல்வம் சேரும்; ஆனுல் அது செதியில் அழிந்து போகும்.
ஆடை இடுப்பில் இறுக்கினுல் :— உமது புகழ் உயரப் போகிறது.
ஆடைகள் மூட்டையாக :— நல்ல மனைவியை குறிக்கும்.
ஆடை விற்பனை :— எதிர்ப்பும் பகையும் அதிகரிக்கும்.
ஆடையில் இரத்தம் :— எதிர் பாராத வழியில் செல்வம் சேரும்.
ஆடையில் சிறுநீர் :— நல்ல சந்ததியினர் உண்டாகும் முன் அறிவிப்பு.
ஆடையில் சாயம் :— கொடிய நோய்கள் ஏற்படும். எழுத்தாளராக இருந்தால் சில சிக்கல் தோன்றும்.
ஆடை கையில் :— ஆணுனுல் அச்சமும் இழிவும் ஏற்படும்; ஆனுல் பகையை வெல்லுவீர்; ஆண் மகன் கிடைப்பான்.
ஆடை தூய்மை :— சற்று காலம் சென்று கௌரவம் பெருகும்.
ஆடை வெள்ளை :— மரியாதை பெருகி மகிழ்வு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை கறுப்பு :-- பெருமையும் சிறப்பும் கிடைக்க உள்ளது.
ஆடை பச்சை :-- மார்க்க உயர் ஞானியாகும் அறிகுறி.
ஆடை சிவப்பு :-- பெண்ணுக்கு நன்மையும்; ஆணுக்கு சண்டை சச்சரவையும் தோற்றுவிக்கும்.
ஆடை காவி மஞ்சள் :-- கவலையும் நீண்ட நோயும் உண்டாகும் அறிகுறி.

ஆண் குறியை கண்டால் :-- சந்ததியினரைக் குறிக்கும்.
ஆண் குறி நீண்டதாக இருந்தால் :-- சந்ததியினர் அதிகரிப்பர்.

ஆண் குறி துண்டித்திருந்தால் :-- சந்ததி அற்று விடும்.
ஆண் குறியில் இரத்தம் :-- சந்ததியினர் பற்றிய கவலை நீடிக்கும்.
ஆண் புணர்ச்சி :-- நல்லவர் கண்டிருந்தால் நற்பலன்கள் கிட்டும்.
ஆண் பெண் புணர்ச்சி :-- உமது சந்தான விருத்தி கூடும் (அறிகுறி.)

ஆணம் குடித்தால் :-- உடல் நலன் கிட்டும்; செல்வம் சீராகும்.

ஆந்தையை கண்டால் :-- பலவீனமான கள்வனிருக்கும்.

ஆப்பிள் பழம் :-- சந்தோச வாழ்வும் விவேகமுள்ள சற்புத்திரரும் கிடைப்பர்.

ஆப்பு :-- மார்க்க உறுதியுள்ள சங்கையான மனிதனுக்கும்.

ஆமையை கண்டால் :-- நப்சளவில் தொண்டிப்படச் செய்யும் நல்ல ஆபிதா (வணக்கசாலியா)ன மனிதனாகும்.
ஆமைக் கறியை தின்றால் :-- அறிவு ஞானங்கள் கிட்டும்.
ஆரம்ப பாடசாலை :-- அச்சமும் விசனமும் ஏற்படும்.

ஆலிமை கண்டால் :-- வாழ்வில் நல்ல திருப்பம் ஏற்படும்.

ஆள் காட்டிப் பறவை -- அநீதி நிறைந்த அதிகாரியாகும்.

ஆற்றைக் கண்டால் :-- அமைதியான சிந்தனையும் கவலைகள் அற்ற வாழ்வும் கிட்டும்.
ஆற்றில் நீந்தினால் :-- சிந்தனையால் உயர்வுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றில் நீந்தினுல் :— சிந்தனையால் உயர்வுண்டாகும்.
ஆற்றில் நீராருந்தினுல் :— வெற்றியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.
ஆற்றில் ஆழ்ந்தால் :— சில கஷ்டங்கள் வந்து தீரும்.
ஆறு; கால் வாயில் வீழ்ந்து கிடந்தால் :— கஷ்டத்துடன் பொருள் தேட நேரிடும்.

(.) (.) (.)

இடி ஓசை கேட்கக் கண்டால் :— நோய் விலகும்; கடன் தீரும்; சிறையாளிக்கு விடுதலை கிட்டும்.
இடி ஒளி (மின்னல்) :— சீமான் தரித்திரியனுவான்; தரித்திரியன் சீமானுவான்.

இமாம்களை கண்டால் :— ஒரு கூட்டத்தின் தலைவர் ஆவீர்.
இமாமாக தொழுவித்தால் :— சமூகத்தில் உயர்வும் சங்கையும் கிட்டும்.

இரத்தத்தை கண்டால் :— முதல்களளவில் அறிவிக்கும்;
இரத்தம் புரளக் கண்டால் :— எதிர்பாராத செல்வம் சேரும்
இரத்திப்பு செய்தால் :— நோய் மிடி விலகும் நன்மைகள் பெருகும்.

இராஜாளி :— அரசாங்க கொடுமையான அதிகாரியாகும்.

இருநயம் :— அறிஞர் சிந்தனையாளர் வரிசையில் சேர்வீர்.

இறைச்சி (ஆகுமான பிராணியினது);— ஹலாலான முதல்.
,, (ஆகாத பிராணியினது),— ஹறுமான முதல்.
,, (பச்சையானது) ஹறுமான முதல்கள்;
,, (பதமானது):— அறியாப்புறம் ஹலாலான செல்வம் சேரும்.

இலைசாகம் கையில் :— எதிர்பாராத குழபபம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசலைக் கண்டால் :-- பால் பொங்கும் வாழ்வுண்டாகும்.

ஈட்டியை கண்டால் :-- எதிர் பாராத பிரயாணம் ஏற்படும்; தலைமைப் பதவி தேடிவரும்.

ஈத்தம் பழத்தை கண்டால் :-- பிரபல மற்ற அறிவாளி.

ஈத்தம் பழம் உண்டால் :-- பழம் உண்டாகும் காலமானால் சந்தோசம் ஏற்படும்.

ஈத்தம் பழம் பொறுக்கினால் :-- ஆண் குழந்தை கிடைக்கும் எண்ணங்கள் நிறை வேறும்.

ஈத்தம் விதையை உண்டால் :-- ஹலாலான உணவு சேரும்.

ஈத்தை தோட்டத்தில் இருந்தால் :-- பெரியார்களை சந்தித்து ஆசிர்வாதம் பெறுவீர்; செல்வநிலை மேம்படும்.

ஈத்தை பச்சை மரம் :-- உனது அறிவால் உலகோர் பெரும் பயன் எய்துவர்.

ஈயைக் கண்டால் :-- சமூக கீழ் மட்டத்திலுள்ள மனிதனாகும்

ஈரலைக் கண்டால் :-- நிறை செல்வமான வாழ்வு கிடைக்கும். நன்மாராயமாகும்.

(.) (.) (.)

உடும்பைக் கண்டால் :-- செல்வத்தை சிதறடிக்கும் மனிதனாகும்.

உடும்பைச் சாப்பிட்டால் ;-- நோய் வாய்ப் படுவீர்.

உண்ணும் விரிப்பு :-- செல்வம் பெருகும்; சிறப்பு உயரும்.

உணவு கழுத்தில் :-- சடுதியில் வியாதி காணும்; மரணம் சம்பவிக்கும்.

உதடு :-- நல்ல விசுவாசமான நண்பன் ஏற்படப் போகிறான்.

உப்பைக் கண்டால் :-- நோய் நீங்கும்; நன்மைகள் பெருகும்.

உப்பு நீர் :-- பொருள் சேதமும் கவலையும் ஏற்படும்.

உப்புப் பாத்திரம் :-- மணம் போல் மாங்கல்யம் கிட்டும்.

உபதேசம் செய்தால் :-- உயர் தலைமை பதவி கிட்டும்.

உயிர்ப் பிராணியை வெட்டினால் :-- கௌரவம் ஏற்பட்டு உயருவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரத்த சப்தம் :— உன் வாழ்வின் அமைதி குலேயும் அறிகுறி.
உருவப் படம் :— கருப்பவதி உன் வீட்டில் இருக்கிறுள்.
உரொட்டி கிடைத்தால் :— வறுமையும் கவலேயும் தீரும்.
உரொட்டி அதிகமாக :— வாழுள் நீடிக்கும; நண்பர்கள் சேருவர்.
உரொட்டி இனித்தால் :— ஹலாலான உணவுகள் சேரும்.
உழு செய்தால் :— துக்கம் நீங்கும்; ஆனல் கசப்புகள் தோன்றும்.

(.) (.) (.)

ஊசியை கண்டால் :— செல்வமும் செல்வாக்கும் அதிகரிக்கும்.
ஊசியால் தைத்தால் :— மக்கள் சேவகளுக மாறுவீர்.
ஊஞ்சலாடிஞல் :— பேராசை பெருகி அவதிகள் கூடும்.
ஊமையாக கண்டால் :— அறிவு நிலே குறையும்; கலக்கமும் அதிகரிக்கும்.
ஊமையனே கண்டால் :— ஞானம் குன்றி பொருள் நஷ்டம் ஏற்படும்.
ஊசி பெரியது :— சிலவற்றை கண்டால் சந்தோசமும் சம்பத்தும் ஏற்படும். அநேகமான துக்கமும் தொல்லேயும் ஏற்படும்.

(.) (.) (.)

எண்ணம் நிறை வேறக்கண்டால் :— அலேச்சல் அதிகரிக்கும் அறிகுறி.
எதிரியின் கையை பிடித்தால் :— சச்சரவுகள் நீங்கி சந்தோசம் உண்டாகும்.
எலியை கண்டால் :— கெட்ட குழப்பம் செய்யும் பெண்ணுகும்.
எலுமிச்சம் பழம் :— நோய்கள் நீங்கி வாழ்வும் சிறக்கும் அறிகுறி.
எலுமிச்சம் பழம் உண்டால் :— நோய் உண்டாகி தொல்லேகள் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்பு :— தகாத வழியில் பொருள் சேரும்; நோய்கள் தொடரும்.

எலும்பு முள்ளு :— பற்கட்டு உறுதி பெறும்; சௌக்கியம் கிட்டும்.

எவரையும் கண்டித்தால் :— உத்தியோகத்தில் சில தயவுகள் கிட்டும்.

எழுது கோலை (பேனையை) கண்டால் :— ஆண்பிள்ளை பிறக்கும்; மார்க்க ஞானம் அதிகரிக்கும்; அறிவை பரப்புவீர்.

எலியைக் கண்டால் :— எசமான் மூலம் நன்மை பெறும் ஊழியன்.

எழுதக் கண்டால் :— துக்கம் பிடிக்கும் அறிகுறியாகும்.
எறும்பை கண்டால் :— மிக பாக்கியம் பெற்ற மனிதனாவோம்.

எறும்பு பாத்திரத்தில் :— மனைவி நம்பிக்கை துரோகியாக இருப்பாள்.

(.) (.) (.)

ஏணி :— வறுமை தரித்திரம் தொடும் அறிகுறி.
ஏறு நெற்றி :— ஆண் குழந்தை கிடைக்கும் நற்செய்தி.

(.) (.) (.)

ஐஸ்கட்டி :— துக்கம் ஏற்படும் அறிகுறி.
ஐஸை உண்டால் :— மகிழ்வுண்டாகும் சந்தோசம் பிறக்கும்.
ஐஸ் நீரை குடித்தால் :— மிகுதிவாழ்வும் சந்தோசமும் உண்டு.
ஐஸ் உடலில் பட்டால் :— உஸ்ணகாலமானால் செல்வமும் சந்தோசமும் உண்டாகும்; குளிர்காலமானால் நோயும் துக்கமும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டகையை கண்டால் :— மார்க்க பக்தியுள்ள சிரேஷ்டமானவர்.

ஒட்டகையில் ஏற சாவாரிசெய்ய :— நீண்டபிரயாணம் செய்வீர்;

ஒட்டகையுடன் சண்டையிட்டுவென்றால்:— எதிரியை வெல்லுவீர்;

ஒட்டகைப் பால் கறந்தால் :— ஒரு பெண்ணால் செல்வங்கள் பெறுவீர்.

ஒட்டகையில் கறந்தது இரத்தமாகுல் :— ஹறுமான முதல் சேரும்.

ஒட்டகையில் சென்று திரும்பினல் :— கவலைபிடிக்கும் ஆனல் நீங்கி விடும்.

ஒட்டகை சில தனதாகக் கண்டால் :— தலைமைப்பதவியும் மக்களிடம் கௌரவமும் ஏற்படும்.

ஒட்டகைப் பெண் :— மணவாதவன் மணம் முடிப்பான்; மற்றவன் பிரயாணம் செய்வான்.

ஒட்டகை ஒரு தலத்தில் புகுந்தால் :— அங்கு கொடிய நோய்கள் பிடிக்கும்.

ஒட்டகை தன்னை பிரிந்தால் :— கண்டவன் தன் மனைவியை பிரிவான்.

ஒளியை கண்டால் :— நேர்வழியும் நற்பதவியுமாகும்; அவர் ஹால் சிறப்பாக உள்ளதை அறிவிக்கிறது; திக்று தியான வழிபாடுகளை அதிகரிக்கவும்; நல்லருள் கிட்டும்.

(.) (.) (.)

ஓநாயை கண்டால் :— அநீதியன அதிகாரி அல்லது பொய்யன் கள்வனுகும்.

ஓநாயின் பாலைக் குடித்தால் :— அநேக நன்மைகளைப் பெறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளூவில் நீர் நிறைந்திருந்தால் :— தீனில் சிறப்பும் உயர்வும் உள்ளவர்.

ஒளூவில் நீரில்லாமலோ/அசுசிகளோ இருந்தால் :— தீனில் குறை உள்ளவர்.

ஒளூவில் வுழு செய்தால்(பாவங்களை விட்டும் நீங்காத மனிதர்) :— தீனில் முன்னேறி வருகின்ற மனிதன்.

(.) (.) (.)

கஃபாவை கண்டால் :— அச்சம் தீர்ந்த தீனில் அப்பழு கற்றவர்.

கஃபாவை தவாபு செய்தால் :— பாவம் தீரும் அச்சம் நீங்கும்.

கஃபாவை நோக்கி தொழுதால் :— தீனில் தரிபாடா அமல் புரிபவர்.

கஃபா திசை தெரியாது விட்டால் :— தீனில் கேடு செய்கிற மனிதன்

கஃபாவின் மேல்/பின்னோக்கி தொழுதால் :— இஸ்லாமி குழப்பம் செய்யும்வித்தியாச கொள்கை உடையவன். இப்படிக் கண்டவன் நேர்வழியில் மீளவேண்டியது அவசியம்; தான் பின்பற்றும் கூட்டத்தை உடனே விட்டு நீங்க வேண்டும்.

கட்டில் :— அதன் அழகு சௌகரியத்துக்கு ஏற்ப பெண் வாய்க்கும்.

கட்டிடம் :— நீளயாப் புறத்திலிருந்து செல்வம் சேரும்.

கடலைக் கண்டால் :— அரசாங்கத்தை குறிக்கும்.

கடலை அமைதியாக கண்டால் :— அரசாங்க பூரண உதவிகள் கிடைக்கும்; நன்மைகள் பெறுவீர்.

கடல் கொந்தளித்தால் :— துக்கமும் கவலையும் பிடிக்கும்.

கடல் நீரை உண்டால் :— உலக அறிவு ஞானங்களைப் பெறுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் தெளிந்த நீரில் ஆழ்ந்தால் :— அரசகாரியங்களில் ஜெயம் உண்டு.

கடல் கொந்தளிப்பில் ஆழ்ந்தால் ;— சங்கடங்களில் சிக்குவீர்.

கடலில் நீந்த/நடக்க கண்டால் :— ஈருலகிலும் கல்வி ஞானங்களைப் பெற்று உயர்ந்து விளங்குவீர்.

கடலில் கப்பல், தோணி, போட் :— உயர்வையும் நலவையும் குறிக்கும்.

கடிவாளம் — உயர் ஞான அறிவுகளைக் குறிக்கும்.

கடிவாளம் அணிந்திருந்தால் :— நோன்பாளியாகவோ அடக்கமுள்ள மனைவியாகவோ இருக்கும்.

கடிதங்கண்டால் :— செய்தியையும் இரகசியத்தையும் குறிக்கும்.

கடிதங்கண்டு விடயம் அறிந்தால் :— உன் நலனில் அக்கறையுள்ள ஒருவரின் உதவி கிடைக்கும்.

கடிதம் முத்திரை இட்டிருந்தால் : — இரகசியத்தை மறைப்பவர்.

கடிதம் திறந்திருந்தால் :— மறைபொருள் வெளியாகும்.

கடிதம் எழுத்தற்றதானால் :— அதனால் நன்மைகள் உண்டாகும்

கடையில் நீர் இருந்தல் :— உன் மதிப்பும் அந்தஸ்தும் உயரும்.

கடை வீதியை கண்டால் :— சற்குணத்தில் நிரப்பமாகுவீர்.

கண்ணைக் கண்டால் :— சொந்தச் சகோதரியைக் குறிக்கும்.

கண் பார்வை கூர்மை :— வாணுள் கூடும். நண்பர்களால் நலன் பெறுவீர். ஆனால் பிரயாணத்தில் வழி தவறுவீர்.

கண் பூரண இருளானால் :— உன்பார்வை கூர்மையாகும்; தெளியும்.

கண்ணைக் கையில் :— நீர் செல்வந்தனாகும் அறிகுறி இது.

கண்ணைக் காலில் :— சகோதரியின் உறவு குறைந்து செல்லும்

கண் மங்கலாக :— தின் துன்யாவில் சிறப்புக் காண்பீர். சற்று நோய் வாய்ப்படுவீர். புத்திரனால் கவலை உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியைக் கண்டால் :-- பணியாளனோ நபனோ வாய்க்கும் அறிகுறி.

கண்ணாடியில் தன் உருவம் :-- குழந்தை கிடைக்கும் அல்லது வேலையை இழப்பீர் அல்லது மனைவியை பிரிவீர்.

கத்தரிக் காய் போன்றவற்றைக் கண்டால் :-- உண்டாகும் காலபானால் கவலைகள் உண்டாகும். அன்றேல் நன்மைகளைப் பெறுவீர்;

கத்தரிக் கோல் :-- சீர்திருத்தவாதியாக திகள்வீர்; அரசாங்கத்தால் சில நன்மைகள் கிடைக்கும்.

கத்தரிக் கோலால் வெட்டினால் :-- மூதலும் புகழும் சேரும்.

கத்தூரி (கஸ்த்தூரி) யை கண்டால் :-- உன் புகழ் பாரெங்கும் பரவும்.

கதைக்கக் கண்டால் :-- சம்பள பதவி உயர்வை குறிக்கும்.

கப்பலைக் கண்டால் ;-- கோபமும் கவலையும் அகலும். ஆனால் சற்று நீங்காத நிம்மதிக் குறைச்சலாய் இருக்கும்.

கப்பலில் ஏறினால் :-- அரசாங்க காரியங்களில் மிகக் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

கப்பலில் இருந்து இறங்கினால் ;-- அரசாங்க சோதனைகள் உன்னை தொடரலாம்.

கப்பல் மூழ்கினால் ;-- திடீர் பரிசோதனையில் அகப்படுவீர்.

கப்பல் தரையில் :-- சிக்கல்கள் சில வந்து துக்கம் தரும்.

கப்று (புதைகுழி) :-- மறந்த விடயங்கள் சில வந்து ஞாபகத்துக்கு வரும்.

கப்றில் நுழைந்தால் :-- குடும்பத்தை பிரிவீர். புதுமை ஒன்று நிகழும்.

கப்றில் தன்னை வைத்தால் :-- சிறையில் அகப்படப் போகிறீர்

கபன் அணிந்தால் :-- வாழ்நாள் கூடும். சந்தோசம் உண்டாகும்.

கயிற்றைக் கண்டால் :-- தீனில் உன் நிலை உயர்ந்துள்ளது. மக்கள் உன்னால் பயன் அடைவர். நீண்ட பயணமும் நிகழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கையை கண்டால் :— தீனில் மோசம் செய்யும் பாவி மனிதன்.

காட்டைக் கண்டால் :— கவலைகள் தீரும்; எதிரியை வெல்லுவீர்.

காட்டு ஆடு :— கண்டவர் ஆணுனால் சந்தோசம்; பெண்ணுனால் துக்கம்.

காட்டுக் கழுதை :— தனலாபமும் மகிழ்வும் உண்டாகும்.

காடு, முள் காணுதது :— நிர்ப்பந்தமான பிரயாணம் செய்வீர்.

காபிராகி விட கண்டால் :— நோய் பிடிக்கும்; சிக்கல்கள் தோன்றும்.

காலைக் கண்டால் :— குடும்பம் பிள்ளை குட்டிகளை குறிக்கும்.

காலின் முழங்காலில் முடி :— முடியின் வலிமைக் கேற்ப வாழ்வமையும்.

கால் விரல்கள் :— நல்ல வலிமையான சந்ததி உம்மால் தோன்றும்.

கால் கெண்டை :— வாழுள் நீடிக்கும். வலிமை உண்டாகும்.

காலணியை கண்டால் :— மனைவியை குறிக்கும்.

காலணி அணிந்தால் :— நல்ல மனைவியை மணப்பீர்.

காலணியை கழற்றினுல் :— மனைவியை பிரிந்திடுவீர்.

காலணியில் ஓட்டை ஒடிசல் :— மனைவியின் குறைபாட்டை குறிக்கிறது.

காற்றடிக்க கண்டால் :— பொதுவாக நன்மை ஏற்படும்.

காற்று மெல்ல வீசினுல் :— சந்தோச காரியங்கள் உண்டாகும்; துயரம் விலகும்.

காற்று பலமாக விசினுல் :— துக்கமும் துயரமும் வர உள்ளது.

காற்று புயலாக வீசியடித்தால் :— கண்டவருடைய ஊருக்கே ஆபத்து.

காற்று வானத்தின் ஒரு கோடியில் வீசினுல் :— கண்டவர் மரணமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றை கண்டால் :-- பொதுவாக தூய்மையான நேர் வழியில் உள்ள மனிதன்.

கிணற்றில் நீர் :-- நீனில் உயர்வும் நன்மையும் உண்டாகும்.

கிணற்றில் நீர் அற்றிருந்தால் :-- நீன் துன்யாவிற் கிடையே இருக்கிறீர்; கூடிய சீக்கிரம் நீனில் சேர்ந்து நடப்பீர்.

கிணற்றில பால் :-- இருமையும் வாழ்வும் சிறப்பும் ஓங்கி விளங்கும்.

கிணற்றில் விழுந்தால் :-- பதவி இழக்கநேரும் அல்லது கடன் தொல்லைகள் ஏற்படும்; கஷ்டங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்; ஆனல் நீங்கிவிடும்.

கியாமத் (இறுதி) நாளைக்கண்டால் :-- அரசாங்க நீதி ஜரூர் அடையும்.

கிளி :-- அனுதரவான எத்தீன் குழந்தையை குறிக்கும்.

கிறிஸ்து ஆலயம் :-- தந்திரமாக பொருள் சேர்ப்பீர்; ஆனல் நிம்மதியிராது.

(.) (.) (.)

கீரியை கண்டால் :-- பூனையின் தஃபிர் போன்றது.

(.) (.) (.)

குங்குமப்பூ:-- நீர் செய்யும்நற்காரியங்கள் பிரபல்யமடையும்.

குடலைக் கண்டால் :-- தளபாடங்கள், பொருட்கள், அதிகரிக்கும்; சந்தோச வாழ்வு பெருகும்.

குதிரையைக் கண்டால் :-- அரசாங்கம், பதவிகளை குறிக்கும்.

குதிரை குழம்ப / முட்டக் கண்டால் :-- பாவம் செய்வீர்.

குதிரை பறக்கக் கண்டால் :-- ஈருலக சிறப்புக்களையும் பெற்று மேன்மையுடன் வாழ்வீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை வீதியில் வையாளி போட்டால் :— கடும் மழையோ வெள்ளமோ வரும்.

குதிரைக் கறியை தின்றால் :— அரசாங்கத்தில் பதவிகளும் சமூகத்தில் சிறப்பு மேன்மைகளும் பெறுவீர்.

குதிரை கறுப்போ வெள்ளையோ :— தலைமைப் பதவிகள் கிடைக்கும்; உன் பொருளாதாரம் நல்ல நிலையில் அமையும்; பல வெற்றிகள் பெறுவீர்.

குதிரை கறுப்பு வெள்ளை கலந்தது :— துக்கம் விசமும் உண்டாகும்.

குதிரை சிவப்பு :— சந்தோச சௌபாக்கியம் ஏற்படும் அறிகுறி.

குதிரையின் பால் :— அரசாங்க உதவிகள் கிடைக்க பெறுவீர்.

குதிரை ஒரு தலத்தில் புகுந்தால் :— அங்கு பெரியார் ஒருவர் வருவர்.

குதிரை ஒரு தலத்தை விட்டுச் சென்றால் :— அவ்விட மகிமை குன்றும்.

குதிரையில் அந்நியன் :— நல்ல மனைவியால் கிடைக்கும் அறிவித்தல்.

குதிரை வலியது :— வலிமை மிக்க வீரனாவீர்.

குதிரை நலிந்தது :— நோய் வாய்ப்பட்டு வருந்துவீர்.

குதிரை களவு போனால் :— மனைவியை தேடுவீர்.

குத்பா பிரசங்கம் :— தீனில் பக்தியும் நன்மைகளும் உண்டாகும்.

குர்ஆனைக் கண்டால் :— மார்க்க ஞானமும் தீனில் உயர்வும் கிட்டும்.

குர்ஆனை ஓதினால் :— இறை கார்மானம் கிட்டும் செல்வம் சேரும்.

குர்ஆன் ஓதக் கேட்டால் :— சிறப்பான கச்சவடம் வாய்க்கும்

குர்ஆனை எழுதினால் :— மார்க்கச் சிறப்பும் முதல்களும் சேரும்

குர்ஆனை கிழித்தால் :— சரிஅத் சட்டதிட்டங்களை புறக்கணிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் தாளை தின்றால் — வேதத்தை பரிகசிப்பவர் அல்லது மரணம் வரும்.

குர்ஆனுடன் பேனா :— மெஞ்ஞானம் உயர்வடையும்.

குர்பானி செய்தால் :—கவலைநீங்கும்; சந்தான விருத்திகிட்டும்.

குரங்கை கண்டால் :— கண்டவன் பகைவனை வெல்லுவான்; ஆனால் நோய் நீடிக்கும்; கஷ்டம் வரும்.

குரங்குடன் சண்டை :— வென்றால் நலம், தோற்றால் நோயும் கவலை தரும் கஷ்டங்களும் உண்டாகும்.

குரங்கின் பாலைக் குடித்தால் :— புத்தி குறையும் பேதம் உண்டாகும்; செல்வநிலை சீர்குலைந்து போகும்.

குரங்கின் கறி, இரத்தம், உரோம முதலியன:— ஹறாமான முதல்கள்.

குருடனாக தன்னை கண்டால் :— யாதும் நன்மைகள் இல்லை. ஆனால் பிரயாணியாக இருந்தால் துக்கமாக முடியும்.

குருடு தனக்கு உண்டானால் :— வசதிக்காரன் தரித்திரன் ஆவான்; தரித்திரனுக்கு கவலை நீங்கும்.

குழல் ஊதக் கண்டால் :— அமைதி கெடும் அளவு துக்கம் பிடிக்கும்.

குள்ளனைக் கண்டால் :— மதிப்புக் குறையும் துக்கம் பிடிக்கும்.

குளவியை கண்டால் :— தாழ்ந்த குணசீலம் உள்ள மனிதன்;

குளவி கொட்டினால் :— வீண் வம்பு வார்த்தைகளை கேட்க நேரும்.

குளிக்கக் கண்டால் :— ஆறு, குளம், கடல் போன்ற இடத்துக் கேற்ப பொருள் வேறுபடும்; பொதுவானது பாவம் தீரும்: நன்மை உண்டாகும்; அதில் காணும் அருசி பாவச் செயல்.

குளிக்குமிடம் குளிராக இருந்தால் :— பெண்களால் கவலைகள் ஏற்படும்; மதிப்புக் குறையும்; அலைச்சல் அதிகரிக்கும்.

குற்றவாளியாக தன்னை :— இருமை நன்மைகளும் கிட்டும். பாவம்தீரும்; நோய் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசாவைக் கண்டால் :-- அடக்கமுள்ள நல்ல மனைவியாகும்;
கூரிய ஆயுதங்கள் :-- வாழ்நாள் நீளும்; காரியசித்தி கிட்டும்.

(.) (.) (.)

கையை கண்டால் :-- மனைவி, ஊழியன் உதவியாளர்களைக் குறிக்கும்.
கை துண்டிக்கப் பட்டால் :-- உதவியாளரை இழப்பீர்.
கை நாடி மெதுவாக ஓடினால் :-- வாழ்நாள் நீடிக்கும் அறிகுறி.
கை விரல்கள் :-- நல்லுதவி புரியும் துணைவர்கள் சேருவர்.
கை இடக்கை :-- ஊழியன் ஒத்தாசைக்காரர்கள்.
கை வலதுகை :-- நற்புத்திரரோ நண்பரோ வாய்ப்பர்.
கையில் அஞ்சனம் :-- செல்வமும் சிறப்பும் பெறுவீர்.
கையில் மருதோன்றி :-- பெண்ணுக்கு சந்தோசமுண்டாகும். ஆணானால் சலிப்பு வரும்.
கை வலதில் மருதோன்றி :-- ஆணானால் கொலை ஒன்று நிகழும்.
கை வேஞ்சு :-- நல்ல மனைவி ஊழியனின் உதவிகிட்டும்.

(.) (.) (.)

கொக்கை கண்டால் :-- பரதேசியான மனிதன்.
கொசுவைக் கண்டால் :-- நலிந்தவன் நோய்வாய்ப் படுவான்.
கொடி பச்சை :-- கஷ்டத்துடன் பிரயாணம் மேற்கொள்வீர்; ஆனால் பயன் மிகுதம் உண்டாகும்.
கொடி சிவப்பு :-- மகிழ்ச்சிகள் உண்டாவதற்கான முன் அறிவிப்பு.
கொடி வெள்ளை :-- நீங்கள் ஞான பண்டிதருக உயரப் போகிறீர்.
கொடி கறுப்பு :-- தலைமைப் பதவி கிட்டும் அல்லது பிரயாணம் மேற்கொள்வீர்.
கொண்டை இளார்த்திக்குருவி :-- பரகத்திறைந்த பயலாகும்.
கொலை புரிந்தால் :-- நோய், கடன் தீரும்; ஊறு செய்வீர்.
கொலை செய்யக் கண்டால் :-- குடும்ப செல்வ நிலை உயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை :— மார்க்க பக்தியும் இறைகார மானமும் உண்டாகும்.

கோதுமை :— மிக கஷ்டத்துடன் சீவியம் தள்ள நேரும்.

கோழியை கண்டால் :— பரக்கத்து செய்யப்பட்ட மனிதன்.

கோழி அதிகமாகக் கண்டால் :— சந்தோச சமாச்சாரம் திகழும்

கோழியை அறுத்தால் :— உயர் வாழ்வு கிடைக்கும்.

கோழிக் கறியை தின்றால் ;— வாழ்வில் பரக்கத் அதிகரிக்கும்.

கோழி இறைச்சியை பச்சையாக உண்டால் .— ஹறாம் உண்பவர்.

கோழி முட்டை :— நல்ல மனைவி, அல்லது புத்திரர், அல்லது நண்பர்கள் வந்து வாய்ப்பதை அறிவிக்கும்.

(.) (.) (.)

கௌதாரியை கண்டால் :— நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கும் மனிதனாகும்.

(.) (.) (.)

சக்காத் கொடுக்கக் கண்டால் :— தொழில் துறைகளில் பரக்கத் ஏற்படும்.

சகதியில் விழுந்தால் :— பாவச் செயலில் மூழ்கி இருக்கிறீர்.

சகாயாக்னி :— தீனில் நிப்பறமும் வாழ்வில் சந்தோசமும் பெறுவீர்.

சங்கிலி அணிந்தால் :— பாவத்திலும் கஷ்டத்திலும் சிக்குவீர்.

சங்கிலி நிலத்தில் விழக் கண்டால் :— மரணம் அல்லது சிறை அல்லது தேசப்பிரஸ்டம் கிடைக்கும்.

சத்தியம் செய்தால் :— சந்ததியினர் இறப்பர்; வருவாய் குறையும்.

சந்ததியினர் :— சில சிக்கல்கள் உண்டாகும்.

சந்ததியினருடன் உண்டால் :— சந்தோச சௌபாக்கியம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனைக் கண்டால் :-- மனைவியை மகளைக் குறிக்கும்;

சந்திரன் இளம்பிறை :-- மனைவி வாய்ப்பதை மகன் பிறப்பதை குறிக்கும்; ஆனால் தலைமைப் பதவி ஒன்று கிடைக்கும்.

சந்திரனை கட்டினால் :-- திருமணம் நிகழும்.

சந்திர கிரகணம் :-- வறுமை துன்பம் உண்டாகும் அறிவித்தல். ஆனால் சிசு வயிற்றிலிருந்தால் சிதைவேற்படும்.

சந்திரன் மடியில் :-- பெண் குழந்தை பிறக்கும்; மணக்காதலன் கணவனை அடைவாள்;

சந்திரனை சுமந்தால் :-- கருப்பத்தில் பெண் குழந்தை இருக்கிறது.

சந்திரன் வெள்ளியில் புகுந்தால் :-- முடிவு காலம் வந்து விட்டது.

சந்திரன் வானில் ஒரு கோடியில் மறைந்தால் :-- மரணம் விரைவில்.

சந்தனம் : - பக்தி பெருகி பெயரும் புகழும் உயரும்.

சம்சம் தண்ணீர் அருந்தினால் :-- ஞானவிளக்கம் பெறுவீர் நோய் தீரும்.

சம்பளம் / பென்சன் / கூலி பெற்றால் :-- சந்தோச வாழ்வு உண்டாகும்.

சமாதானம் செய்தால் :-- வாழ்நாள் கூடும் அறிவித்தல்.

சர்பத் / குளிர்பானம் உண்டால் :-- சந்தோச சுக ஜீவியம் உண்டாகும்.

சல்லடை : - மகன் பிறப்பான் ஆனால் உன்புகழ் வீயும்.

சலாமுக்கு பதில் வந்தால் :-- சம்பந்தம் வைக்கப் போகிறீர்.

சலாமுக்கு பதில் இல்லையேல் :-- வேறிடத்து பெண் எடுப்பான்.

சவுர்க்காரம் :-- உளத் தெளிவும் உடல் பொலிவுமுடைய மனிதன்.

சவரனை கண்டால் :-- ஆண் குழந்தை பிறக்கும்.

சன்னல் :-- நல்ல பதிவிரதை மனைவியாகும் அறிகுறி.

சன்மானம் பெற்றால் :-- மனைவியோ குழந்தையோ கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக் குருவியை கண்டால்;-- ஆதகி (அலே) பேரில் அறிவிக்கும்;
நிந்தத்தும் பரக்கத்தும் உண்டாகும்.
சாம்பல், மண், புழுதிகள் :- துக்க நிகழ்ச்சிகள் உண்டாகும்
சாஊபிராணி :- தவறிய பொருள் கைவந்து சேரும்.
சாயம் ;-- தலைமைப்பதவி, கிடைத்து புகழ் பூக்கும்
சாயக்கூடு ;--- நல்ல மனைவி நல்ல பிள்ளை உயர்பதவி
இவற்றில் ஒன்று கிடைக்கும் நன்மாராயம்.
ஜல வித்தை :-- உலகில் அதிக அதிசயங்களை காணுவீர்.

(.) (.) (.)

சிகிச்சை செய்தால் ;-- செல்வனாய்; புத்திரன் புகழாக விளங்குவான்.

இகிச்சையில் இரத்தம் :-- மிகுதி நன்மைகள் உண்டாகும்.
சிங்கத்தை கண்டால் ;-- பகைகளை வெற்றி பெறுவீர்;
சிங்கம் பணிந்தால் ;-- ஒன்றில் தலைமையும் நற்பெயரும் கிட்டும்.
சிங்கத்தை கண்டு மிரண்டால் :-- யுக்தியாக நடந்து கொள்வீர்.

சிட்டுக் குருவி :--- பிரயாணம் பல செய்வீர்; நன்மைகள் பெறுவீர்: ஒருவரின் பணியாளராவீர்;

சிநேகனை சிரச்சேதம் செய்தால் :-- எதிர்பாராத செல்வமும் சிறப்பும் உண்டாகும்.
சிம்மாசனம் ;-- பதவியுடன் பலதும் பெற்று நல்வாழ்வு வாழ்வீர்.

சிரித்தால் ;-- துக்கமும் கவலையும் உண்டாகும் அறிகுறி.
சிரிப்பு அதிகமானால் ;-- நோயும் கவலையும் உண்டாகும்.
சிலந்தியை கண்டால் :-- பொறுமை மிக்க மிஸ்கீனை குறிக்கும்.

சிவப்புக் கல் ;-- நல்ல மனைவி வாய்ப்பாள்; புத்திர பாக்கியமுண்டு.

சிறு புத்திரன் ;-- உன் புத்திரனால் அதிக நன்மைகள் பெறுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு புத்திரி :-- வியாபாரம் தொழில் துறைகள் சிறந்தோங்கும்.
சிறு நீர் கழித்தால் :-- நோய் தீரும்; கடன் விலகும்; நன்மைகள் உண்டு.
சிறு நீருடன் இரத்தம் வந்தால் :-- கருச் சிதைவு நிகழும்; கஷ்டங்கள் சில உண்டாகும்.
சிறைப் பட்டால் :-- நீர் பிரயாணியாக இருந்தால் அது இடைஞ்சல் தரும்.

(.) (.) (.)

சிப்பைக் கண்டால் :-- சகலதும் செவ்வையாக முடியும்.
சிப்பால் வார்ந்தால் :-- செல்வபாக்கியம் உண்டாகும் அறிகுறி.
சிப்பு உடைந்தால் :-- கவலையும் நோயும் உண்டாகும்.

(.) (.) (.)

சுடு நீரைக் கண்டால் :-- அச்சமும் கவலையும் உண்டாகும்.
சுர்மாவைக் கண்டால் :-- ஆண்பிள்ளை கிடைக்கும்; அறிவும் பார்வையும் கூர்மை பெறும்.
சுர்மா இட்டால் :-- மார்க்க சேவை செய்வீர்; கௌரவம் உண்டாகும்.
சுர்மாக் கூடு :-- அழகிய மனைவி கிடைக்கப் போகிறாள்.
சுர்மாக் குச்சு :-- ஆண்மகன் கிடைக்கும் நற்செய்தி.
சுரை கொடி :-- மிகுதி நன்மை உண்டாகும்; பாவமீட்சி கிடைக்கும்.
சுவர்க்கத்தைக் கண்டால் :-- மனைவி மக்களால் மிகுதி பயன் பெறுவீர்.
சுவர்க்கக் கனியுண்டால் :-- மகானுபாவாகுவீர்; ஆசிர்வாதம் கிட்டும்.
சுருட்டப்பட்ட கிதாபு :-- மறைவான சங்கதியை அறிவிக்கும்.
சுவரைக் கண்டால் :-- கௌரவமும் செல்வாக்கும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனைக் கண்டால் :-- தீனில் உயர்வுண்டாகும்; நற்செய்தி ஒன்று வந்து சேரும்; அரசாங்க உதவிகள் கிடைக்கும்.

சூரியன் கதிரைப் பிடித்தால் :-- பிடித்த ஒளியின் அளவு நன்மை உண்டு.

சூரியனை மறைத்தால் :-- பெற்றோருக்கு அல்லது நாட்டின் தலைவனுக்கு நோய் வரும்.

சூரிய கிரகணம் :-- நற் செய்தி ஒன்று வரும். ஆனால் வீடும் உடமைகளும் பலத்த சேதத்துக்குள் ஆகும்.

சூரியன் வெடித்து சிதறினால் :-- கரு சிதைந்துள்ளது.

சூரியன் இறங்கினால் :-- ஆண் குழந்தை பிறக்கும்; தந்தை மரணமாவார்.

சூரியன் வீட்டில் உதயமானால் :-- மணக்காதவன் மணம் புரிவான்; மணந்தவன் அநேக கைகளை பெறுவான்.

(.) (.) (.)

செங்கல் :--அதன் சிவப்புக்கேற்ப நன்மைகள் உண்டாகும்.

செப்புப் பாத்திரம் :-- அரசாங்க உதவிகள் கிடைக்கும்.

செய்த்தூன் எண்ணெய் :-- சிறப்பும் மேன்மையும் உள்ள. நல்வாழ்வு.

செய்த்தானைக் கண்டால் :-- அதிசிறப்பான அமல்செய்பவர்.

செய்த்தான் ஏமாற்றினால் :-- மனைவி சதி செய்வாள்; செல்வம் தேயும்; வாழ்வு சீர் கெடும்.

செய்த்தான் வழிபட்டால் :-- ஞானமும் செல்வமும்கிடைக்கும்.

செவியைக் கண்டால் ;-- நற் செய்தி ஒன்று வரும்.

செவி சுத்தப் பண்ணினால் :-- நற் செய்தி அறிய விளைவீர்.

செவியை தனித்துக் கண்டால் :-- மனைவியின் விடுதலை அல்லது மகளின் மறைவு உண்டாகும்.

செவி நீளமாக இருந்தால் :-- புதுமையான செய்தி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேணத்தைகண்டால் :-- அடக்கமான மனைவி.
சேவலைக் கண்டால் :-- கூவி அழைக்கும் மனிதனுகும்.
சேவல்கொத்தினல் :-- மரணம் உண்டாகும்.
சேவல் கூவினல் :-- நற் செய்தி கிடைக்கும்.
சேற்றைக் கண்டால் :-- பொருள் சேதமும் கஷ்டமும் ஏற்படும்.
சேனை (படை) :-- மிகுதி மழை பெய்து செழிப்புண்டாகும்.
சேனை குழல் ஊதினல் :-- உயர் இராணுவ, கொமாண்டோ பொலிஸ் வீரராகுவீர்.

(.) (.) (.)

சொக்கட்டானைக்கண்டால்:--செல்வம்சேரும்நற்பயன்கிட்டும்.
சொக்கட்டான் விளையாடினல் :-- வீண் வேலைகளில் சிக்க நேரும்.

(.) (.) (.)

சோறு, அரிசிபோன்றவை :-- நோய்கள்வரும்; சிரமத்துடன் பொருள் சேரும்.

(.) (.) (.)

தங்கத்தை கண்டால் :-- கவலைகள் அதிகமாகும்.
தங்கத்தை கொடுத்தால்:-- காரியம்யாவும் சிறப்பாக நிகழும்.
தங்கத்தை பெற்ருல் :-- மார்க்க ஞானங்கள் கிடைக்கும்.
தங்கத்தை தியாகம் பண்ணினல் :-- பொருளை இழந்து வேதனைப்படுவீர்.
தங்கத்தை உருக்கினல் :-- அழிவும் ஆபத்தும் வந்து சேரும்.
தங்கத்தை உரைத்தால் :-- குர்ஆன் ஹதீஸ் ஞானங்களை விளங்குவீர்.
தங்கக் காசை கண்டால் :-- பிறக்கவுள்ள பிள்ளைகளாகும்.
தங்கக்காசு எழுத்தில்லாதது :-- பிள்ளை பிறக்கப் போவதை அறிவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டையான பாத்திரம் :-- நல்ல வேலையாள் வரப் போகிருள்.
தண்ணீரைக் கண்டால் ,-- நல்ல உள்ளமும் செயலுமுள்ள மனிதனுதும்.

தண்ணீரில் அழுக்கு / கலக்கம் :-- பாவத்தை குறிக்கும்.
தண்ணீர் மிகத் தெளிவு :-- விசுவாசம் பக்தியின் உயர்நிலே.
தண்ணீரில் மூழ்கிருல் :--கடன், நோய் கஷ்டங்களே குறிக்கும்.
தண்ணீரில் நீந்திருல் ;-- சிந்தனையால் உயர்வும் பாவ மீட்சியும் கிடைக்கும்.

தண்ணீர் வரும் குழாய் ;-- சந்தோசம் பெருமையும் கிட்டும்; நல்லோர்கள் நேசம் ஏற்படும்.

தண்ணீர் அருந்தி மகிழ்ந்தால் :-- வெற்றியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

தண்ணீர் ஊற்றில் நீர் :-- ஆண்மை அழகு செல்வம் சேரும்.
தண்ணீர் கேணி:-- அறிவும் அந்தஸ்தும் உயரும்; மக்கள் உபகாரம் அதிகரிக்கும்.

தண்ணீர் ஓட்டம் :-- நினைத்த காரியம் சித்தியாகும். பொருள் சேரும்.

தண்ணீர் ஏற்றம் (ஏத்து) :-- நீருடன் கண்டால் மகிழ்ச்சி உண்டாகும்.

தண்ணீர் கூசா ;-- பணிவுள்ள ஊழியனை குறிக்கும்.

தபேலா / தம்பூரா வாத்தியம் :-- பொய்யை கேட்க நேரும்; கேளிக்கையில் ஈடுபடுவீர்.

தயிரைக் கண்டால் :— ஆகுமான உணவு கிட்டும்; அச்சம் தீரும்.

தர்மம் செய்யக் கண்டால் :-- வியாபாரம் சிறக்கும்; நோய் தீரும்.

தரகனைக் கண்டால் ;-- சிறந்த செய்கு (வழிகாட்டி) கிடைப்பார்.

தலாக் கூறக் கண்டால் :-- பணக்காரனுகும் நற்செய்தி;
தலையணை :-- மனைவியை ஊழியனைக் குறிக்கும்;
தலைப்பாகையை கண்டால் :-- அரசாங்க உதவி பதவிகளை குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பாகை அணிந்தால் :- அது பட்டால் செய்திருந்தால் பாவமும் வழிகேடும் உண்டாகும்: ஆனால் நூலால் செய்திருந்தால் சந்தோசம் கிடைக்கும்.
தலையை கண்டால் :-- குடும்பத்தை விரைவில் பிரிவீர்.
தலை, திருத்தால் :-- வாழ்வில் சில கஷ்டங்கள் பிறக்கும்.
தலையில் மனிதன் :-- அதிகாரம் கிடைக்கும் விரோதம் குலையும்.
தலையில் தங்கம் :-- அயலூர் செல்ல நேரிடும்.
தலையில் எண்ணெய் :-- எண்ணெயின் தூய்மைக் கேற்ப நன்மை பெறுவீர்.
தலை முடி வெட்டினால் :-- விவாகம் நிகழும், பிரயாணம் முடிவடையும்.
தலை முடி வழித்தால் :--அதிகாரம்நீங்கும்; மனைவியை பிரிவீர்; மக்களிடம் மதிப்புக்குறையும்.
தலை முடி உதிர்ந்தால் :-- கடன் தீரும்; நோய் விலகும் கஷ்டங்கள் விலகும்.
தலை துண்டிக்கப் பட்டால் :- பொருள் சேரும்.
தலைவனை கண்டால் :-- தீன்வழி நடப்போன்; சாலிஹ் ன்
தலைவனை மிகுதியாக கண்டால் :-- இறை கட்டளையை நிறைவேற்றுவோர்
தலைவன் ஒரு தலத்தில் புகுந்தால் :-- அங்கு இறை தண்டனை உண்டாகும்.
தற்கொலை செய்யக் கண்டால் :-- வாழுள் நீடிக்கும் அறிவித்தல்.
தன் முகத்தில் மண் புழுதி :-- துக்கமும் விசனமும் பிடிக்கும்
தன்னை பலவானாக கண்டால் ;-- பாவத்தை விட்டும் மீளுவீர்.
தனது பிராணி சிரச் சேதமானால் -- அப்பிராணியின் வலிமை உண்டாகும்.
தனத்தைக் கண்டால் :-- நல்ல மனைவி நற்புத்திரனைக் குறிக்கும்.

(·) (·) (·)

தாகமாக கண்டால் :-- வணக்க வழிபாடுகளில் சோம்பேறி ஆகும்.
தாடியை தனக்கு கண்டால் :-- மணம் புரிவான்; கௌரவம் ஏற்படும்.
தாடி அடர்த்தியாக :-- செல்வமும் தேகசுகமும் வாய்க்கும்; கவலை அகலும்.
தாடி குச்சுத்தாடி :-- [illegible] கஷ்டங்கள் ஏற்படும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடியை வெட்டினால் / வழித்தால் :— தரித்திரமும் வழிகேடும் உண்டாகும்.

தாடியை பிடுங்கினால் :— வீண் விளையாட்டு வேடிக்கைகாரன்.

தாடி கறுப்பாக இருந்தால் :— சிறப்பும் மேன்மையும் உண்டாகும்.

தாடி வெண்மை :— கௌரவமும் துஆ கபூலாவதும் உறுதியாகிறது.

தாடியில் சாயம் :— வறுமையும் சோதனைசளும் ஏற்படும்.

தாய் தந்தையரைக் கண்டால் :— கவலைகள் கஷ்டங்கள் நீங்கும்.

தாய் தந்தையுடன் பேசினால்:— மனக்கவலைகள் மாறும்.

தாய் வயிற்றில் பிறக்க :— துன்பமும் கவலையும் வீயும்.

தாலியை கண்டால் :— மனைவியாக இருக்கும்.

தானியங்களை உண்டால் ;— துக்கம் அச்சம் பிடிக்கும்.

தானிய அறுவடை :— ஆசைகள் குறையும்; ஆகுமான செல்வம் சேரும்.

தான் அழிய ;— பாவம் குறையும்; நற்கிரிகை பெருகும்.

தான் படுத்திருக்க :— பிரயாணம் செய்வீர்; விரைவில் திரும்புவீர்.

தான் தன் நிழலை :— செல்வமும் ஞானமும் உயர் சிறப்பும் ஏற்படும்.

(.) (:) (:)

திராட்சை பழத்தைக் கண்டால் :— நோய் அகலும் மகிழ்வு உண்டாகும்.

திராட்சை வெள்ளை :— விவேகமும் பூராயமும் ஏற்படும்.

திராட்சை பிழிந்தால் :— போன பதவி மீண்டு வரும்.

திராட்சையில் சீமைய்த் திராட்சை :— மிகுதி செல்வ வளங்கள் சேரும்.

திறப்பைக் கண்டால் ;— எண்ணம் நிறைவேறும்; செல்வமும் செல்வாக்கும் ஏற்படும்.

திறப்பால் திறந்தால் -— மேற்பதவிகள் கிடைக்கும் அறிகுறி.

(.) (.) (.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ மழுங்கிப் பட்சி :— பறுத்தியான (அச்சமுள்ள) மனிதன்.

துப்பக் கண்டால் ;-- துப்பப்பட்டவன் திறையும் இழிவும் பெறுவான்.

துப்பாக்கி குண்டு :-- ஏதோ ஒன்றில் தலைமை பதவி கிட்டும்; எண்ணம் நிறை வேறும்; பிணிகள் அகலும் அறிகுறி.

துப்பாக்கி வீரர், கொமாண்டோவை வழிமறிக்க பயங்கரமாக ;-- ஒரு ஊரில் கலகம் விளையும்; சண்டையுண்டாகும்.

துப் மிறுல் :-- ஹஜ் செய்வீர்.

துப்மலுக்கு பதில் கிடைத்தால் :-- சம்பந்தம் பேசுவான்; அல்லது ஹஜ் உம்ரு இரண்டையும் செய்வான்.

தூக்கு மேடை :-- மேலான பதவி ஒன்று கிடைக்கும் அறிகுறி.

(.) ( ) (.)

தேநீர் குடித்தால் :-- சுகசீவியாக வாழ்வீர்.

தேவு (பேய் இனம்) ;-- அழகாகக் கண்டால் நன்மைகள் உண்டாகும்.

தேனைக் கண்டால் :-- குர்ஆன் ஞானமும் உயர் அறிவும் ஏற்படும்.

தேனை தின்ன / மயங்க கண்டால் ;-- இனிய வார்த்தைகள் பகருவீர்.

தேன் கூடு :-- பெருமை உடையவர் சிறுமையடைவார்

தேன் ஈ '-- தற்காலிக சிறு சந்தோசம் உண்டாகும்

(.) (·) (.)

தொடையை கண்டால் :-- மனைவி குடும்பத்தை சந்தேகிப்பீர்.

தொழக் கண்டால் :-- பாவம் தீரும்; நன்மைகள் ஏற்படும்:

தொழுவிக்கக் கண்டால் :-- தலைமையும் சிறப்பும் கிடைக்கும்.

தொழுகையில் ஆரம்பதக்பீர் சொன்னுல் :-- மரணம் நிகழும்.

தோடம் பழம் :-- ஹலாலான உணவு வந்து சேரும்.

தோளைக் கண்டால் : -- நண்பனும் அவன் உதவியுமாகும்.

(.) (.) (.)

நகத்தை கண்டால் :-- அழகான தானதாயின் நன்மைகள் உண்டாகும்.

நகத்தை விகாரமாக :-- நிம்மதிக் குறைச்சல் ஏற்படும்.

நகம் வெட்டினுல் ;-- கடன் தீரும்; சுகம் உண்டாகும்.

நகம் நீண்டது :-- எண்ணம் நிறைவேறும்; விரோதியை வெல்வீர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர மக்களுக்குப் பேசினால் :— பஞ்சமும் குழப்பமும் உண்டாகும்.

நகரில் குமாரன் உலாவினால் :— கொள்ளை நோய் ஏற்படும் அறிகுறி.

நகரா (நெளரா) :— பெயர் பிரபல்யமடையப் போகிறது.
நகராவை தட்டினால் ;— செய்தி அறிவிப்பாளன்.

நஞ்சுண்டால் :— மனஸ்தாபங்களும் கவலைகளும் உண்டாகும்.

நட்சத்திரத்தை கண்டால் :— அரசாங்க மேலதிகாரிகளின் உதவி கிட்டும்.

நட்சத்திரத்தை தின்றால் :— வறுமையும் கஷ்டமும் உண்டாகும்.

நட்சத்திரத்தை எடுத்தால் ;— சிறப்பு வாய்ந்த குழந்தை பிறக்கும்.

நட்சத்திரம் விழுந்தால் :— அங்கு இறைவனின் வேதனை இறங்கும்.

நட்சத்திரம் எரிந்து விழுந்தால் :— சீமான் ஏழையாவான்; ஏழை இறப்பான்.

நட்சத்திரம் அதிகமாக :— அரசாங்க உதவி உபகாரம் கிடைக்கும்.

நட்சத்திரம் சுற்ற :— நல்ல மனைவி கிடைக்கும் அறிவித்தல்.
நட்சத்திரம் கரையா :— பதவி உயர்வுகள் சந்தோசங்கள் உண்டாகும்.

நட்டுவக் காலியை கண்டால் :— கீழான தீபகபாவமுள்ளவன்.
நட்டுவக்காலி கொட்டினால் :— உன்னை புறம் பேசப்படும்.
நட்டுவக்காலியை கொன்றால் :— பகைவனை வெல்லுவீர்.
நட்டுவக்காலி கறியை தின்றால் :— பகைவனில் நின்றும் முதல் சேரும்.

நட்டுவக் காலி ஒரு இடத்தில் புகுந்தால் :— உன் பேச்சால் கலகம் விளையும்.

நண்டைக் கண்டால் :— நற்குணமுள்ள நல்லடியான்.
நந்தவனத்தை கண்டால் :— நல்ல சுகசீவியத்தின் அறிகுறி.
நபிமாரைக் கண்டால் :— மெஞ்ஞான இரகசியத்தை மறைக்கும் மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிநாயகம் (ஸல்) அவர்களைக் கண்டால் :-- மெஞ்ஞானத் திருப்பமான அடியாருவர்ன். "என்னைக் கண்டவன் றக்கையே கண்டான்" "என்னைக் கண்டவன் நரகம் புகமாட்டான்" "என்னுருவை எடுக்க ஷைத்தான் சகதி பெறமாட்டான்" என்றும் ஹதீஸில் வந்திருப்பதால் கண்டவன் பாக்கியசாலி. கண்டவனைக் காண்பதும் அவருடன் உறவு வைப்பதும் மிகுதி நன்மைகளை கொண்டு வரும்.

நரகை கண்டால் :-- கண்டவன் மிகப் பாவியாகும்.

நரகில் புகக் கண்டால் :-- பாவம் மீறி விட்டது; இறைவனை அஞ்சிக் கொள்; பாவ மன்னிப்புத் தேடு.

நரகிலிருந்து வெளியானால் :-- பாவத்தை விட்டு விலகுவான்; நேர்வழியுண்டாகும்.

நரம்பு தெறித்தால் :-- அதிர்வு தரும் வார்த்தைகளை கேட்பீர்.

நரியை கண்டால் :-- பழகுபவர்களுடன் கவனமாக நடக்க வேண்டும்.

நரியுடன் விளையாடினால் :-- எண்ணம் நிறைவேறும். காரிய சித்திகள் கிடைக்கப் போகின்றன.

நவரத்தினம் :-- பக்தியும், புகழும், வீரமும் ஒன்றாக கிடைக்கும் முன் அறிவித்தல்.

நறுமணம் :-- தீனில் பக்தியும், நற்குணம் ஏற்படும்.

( ) ( ) ( . )

நாட்டியம் ஆடக் கண்டால் :-- திருமணம் செய்வீர்; மகிழ்வு உண்டாகும்; ஆனால் இறுதி அச்சமும் கவலையுமாக முடியும்.

நாணயத்தை கண்டால் :-- மூடர்கள் பால் உபதேசம் புரிபவர்;

நாணயத்தை பெற்றால் :-- நல்லோர்களின் உறவு கிடைக்கும்.

நாணயத்தை கொடுத்தால் :-- பிறரை நல்வழிப்படுத்துவீர்.

நாயை கண்டால் :-- உமக்கு சாதாரண பகை ஒன்றிருக்கிறது.

நாய் கடித்தால் :-- விரோதியுடன் மோதுவீர்.

நாய் குரைத்தால் ;-- இழிவான வார்த்தைகளை கேட்கநேரும்.

நாய் பணிந்தால் ;-- கீழான மனம் கட்டுப்பாட்டில் இருக்கிறது;

நாய்க் கறியை உண்டால் :-- பகைவனில் நின்று முதல்களை பெறுவீர்.

நாய்ப் பாலை உண்டால் :-- கெட்ட பயங்கர பீதிகள் உண்டாகும்;

நாவை கண்டால் :-- பிரசங்கியாக மாறுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா அடங்கி இருந்தால் :— ஆபத்துகளில் சிக்குவீர்.
நாவால்எச்சில்/வேறேதும் வந்தால்:--செல்வம்சேரும் அறிகுறி.
நா நீளமாக இருந்தால் : – எதிர்பாராத சங்கடங்கள் வரும்.
நாவால் உண்டால் :-- செலவினம் அதிகரிக்கும்.
நாவில் முடி ;— எதிர்பாராத கஷ்டங்கள் வந்து சேரும்.
நாற்காற் பிராணி :-- சிறப்பும் செல்வமும் உண்டாகும்.
நீண்ட சட்டை ;— திடீர் விவாக சம்பந்தம் ஏற்படும்.

(.) (.) (.)

நெய்யைக் கண்டால் :-- வியாபாரம் நல்ல இலாபத்தில் நடக்கும்.
நெருப்பைக் கண்டால் ;-- பணக்காரி மனைவியாகுவாள்: சமூகத்தில் நன்மதிப்பு உண்டாகும்: பாவமீட்சி உண்டாகும்.
நெருப்பை எடுத்தால் :-- செல்வனாகும் அறிகுறி.
நெருப்பால் சமைத்தால் :-- அதிக நன்மைகள் பெறுவீர்.
நெருப்புச் சுவாலை ;-- கஷ்டங்கள் துன்பங்கள் வர இருப்பதற்கான முன்னெச்சரிக்கை.
நெருப்பில் விறகெரிந்தால் :-- நம்பிக்கை துரோகமும் கவலைகளும் உண்டாகும்.
நெற்றியை கண்டால்;-- ஆண் மகன் கிடைக்கும் நன்மாராயம்.
நோன்பு நோற்றிருக்க கண்டால் :-- பாவங்கள் தீரும், சோதனைகள் உண்டாகி தீர்ந்து விடும்.

(.) (.) (.)

பசித்திருக்க கண்டால் ;-- தொல்லைகள் கூடி அலைச்சல் அதிகமாகும்.
பசுவைக் கண்டால் :-- வசதியும் பரக்கத்தும் உண்டாகும். அறிகுறி.
பஞ்சை கண்டால் :-- நிரந்தர வருமானம் ஒன்றுக்கு வழி பிறக்கிறது.
பதுக்கை விரிப்பு :-- நல்ல மனையாட்டியை குறிக்கும்.
பரண் :--மதிப்பு உயர்ந்து செல்வம் பெருக வழி உண்டாகிறது.
பருந்தைகண்டால் :--பாவம்பெருகும்; அக்கிரமம் அதிகரிக்கும்.
பருப்புபோன்றதானியங்கள்:--நோய்நொடி ஏற்படும் அறிகுறி.
பல்லைக் கண்டால் :-- உறவினரான குடும்பம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல் பிடுங்கினால் :— பொருள் சேரும்; உதவிகள் குறையும்;
பல் விழுந்தால் :— குடும்பத்தினர் ஒருவர் இறப்பர்.
பல் விளக்கினால் :— பாவம் தீரும்; நன்மைகள் பெருகும்.
பல்லக்கு (சிவிகை) :—மறைந்திருந்த இரகசியம் வெளியாகும்.
பவளம் :— ஆயுள்காலம்நீளமாகும். வெற்றிகள் உண்டாகும்.
பள்ளி வாசலைக் கண்டால் :— தீனில் நிரப்பமான மனிதன்.
பள்ளியில் தொழுதால் :— தொழுகை நிரப்பமாக இருந்தால் நல்லடியான்.
பளிங்குபாத்திரம் :— குடிகாரனாக மாறும் அறிகுறி நிலையை மாற்றுக
பறங்கிப் பழம் :— செல்வம் சிறக்கும்; குணத்தில் உயருவீர்;
பறவையை கண்டால் :— அறியப்படாததாக இருந்தால் வானவர்.
பறவையுடன் பேசினால் :— உரிமைச் சொத்து கிடைக்கும்;
பறவை பாடினால் :— காதலில் சிக்க நேரிடும்;
பன்றியைக் கண்டால் :— கஷ்டத்தில் சிக்க நேரிடும்;
பன்றிப் பால் :— தகாத நடத்தைகளுக்கு ஆளாகுவீர்.
பனையை கண்டால் :— காய்த்திருந்தால் பொருள் தேடும் கஷ்டம் அதிகரிக்கும். வெறுமனே கண்டால் துக்கமும் நோயும் உண்டாகும்;
பஜித்தால் (திக்று செய்ய) :— ஈருலக சிறப்பும் உண்டாகும்.

(.) (.) (.)

பாங்கு சொன்னால் :— ஹஜ் செய்ய செல்வான்.
பாங்கும் இகாமத்தும் சொன்னால் :— ஹஜ் செய்வான்.
பாங்கு ஹஜ் அல்லாத மாதத்தில் சொன்னால் :— கள்வனாகும்.
பாங்கு பூரணமில்லாது சொன்னால் :— ஹஜ் செய்வான் நிரப்பமாகாது.
பாங்கு அறியாத மொழியில் சொன்னால் :— சொன்னவன் கள்ளன்;
பாடல் நூல் :— பொய்யும் வழிகேடும் உண்டாகும்.
பாதத்தை கண்டால் :— உமது சந்தோசம் அதிகரிக்கும்;
பாதம் பெரியது :— அச்சமும் தொல்லையும் நீங்கும்;
பாதம் மறைந்த ஆடை :— ஆணானால் மகன் கிடைப்பான்;
பெண்ணானால் குச்சரவுகள் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதத்தால் புனிதம் தீட்டினால் :— துக்கங்களில் மாட்டுவீர்.
பாதரட்சை அணிந்தால் :— நல்ல மனைவியைக் குறிக்கும். நீண்ட பிரயாணம் செய்ய நேரும்.
பாதை நேரானது :— நேர் வழியில் தொண்டு செய்பவன்.
பாதை கோணல் :— நேர் வழியில் நின்றும் விலகி உள்ளீர்.
பாதையில் புழுதி :— எண்ணங்கள் யாவும் நிறைவு பெறும் ஆனால் சோதனைகள் தொடரும்

பாம்பைக் கண்டால் :— உமது பகைவனைக் குறிக்கும்.
பாம்பு கடித்தால் :— பகைவனால் கெடுதி ஏற்படும் ஜாக்கிரதை.
பாம்பை அடித்தால் :— பகைமை ஒழியும். நலவு பிறக்கும்.
பாம்பு இறைச்சியை உண்டால் :— பகைவனில் நின்றும் நலவை பெறுவான்.

பாம்பு பேசினால் :— பகைவனில் நின்றும் சில நன்மைகள் வரப்போகின்றது.

பாம்புக்கு காலிருந்தால் :— வலிமை மிக்க பகைவன்.
பாம்பு இணங்கினால் :— முன்னேற்றங்கள் உண்டாகும்.
பாம்பு வீட்டில் :— மனைவி அதிகாரியாக இருக்கிறாள்.
பாம்பு விழக்கண்டால் :— அச்சமும் துக்கமும் பிடிக்கும்.

பாலைக் கண்டால் :— மெய்ஞ்ஞான உயர் அறிவுகளைக் குறிக்கும்.
பாலைக் கறந்தால் :— ஒரு பெண்ணால் சில நன்மைகள் ஏற்படும்
பாலாடை உண்டால் :— எதிர்பாராத செல்வமும் திடீர் கவலைகளும் ஏற்படும்.

பாலம் :— அச்சமும் அலைச்சலும் தொல்லைகளும் தொடரும்.

(•) (•) (•)

பிணை நிற்கக்கண்டால் :— குறித்தவனால் நன்மை பெறுவீர்.
பித்தனை (பைத்தியம்) :— சௌக்கியமும் செல்வமும் ஏற்படும்.
பிரசங்கியை :— நற்குண நன்நடத்தை பெருகும்.
பிரசவ நோவு ஏற்பட்டால் :— சந்தோச வாழ்வுண்டாகும் நோய் விலகும்.

பிரயாணக் கூட்டம் :— அதில் நீயும் இருந்தால் துக்கம் அடைவீர், அன்றேல் சந்தோச சுக வாழ்வுக்கு இடமுண்டாகும்.

பீரங்கி / டாங்கி ... வாழ்வில் வெற்றிகள் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையை கண்டால் :-- எதிர்பாராத சண்டை குழப்பம் ஏற்பட உள்ளது.

புத்தக பக்கங்கள் ;-- பெயர் பிரபல்யம் அடையப் போகிறது:

புதிய பாத்திரம் :-- உயர் வாழ்வும் நன்மைகளும் ஏற்படும் அறிகுறி:

புதை குழி தோண்டினால் :-- வீடு கட்டுவீர்; மறைந்தவற்றை புதுப்பிப்பீர்.

புருவம் :-- அதன் செம்மைக் கேற்ப நன்மைகள் ஏற்படும்.

புல்லைக் கண்டால் ;--விவசாய முயற்சிகள் அதிக பயன் தரும்.

புல் தரை :-- மிகுதி சந்தோச வாழ்வுக்கு நன்மாராயம்.

புல் புல் பறவை :-- சங்கீத ஞானமும், வாழ்வு செழுமையும் அடையும்.

புலம்பக் கண்டால் ;-- சீமானுக்கு துக்கமும் ஏழைக்கு வாழ்வும் உண்டு.

புலியைக் கண்டால் :-- அரசாங்கம் விரோதியையும் குறிக்கும்;

புலியுடன் சண்டை ;-- வென்றால் பகைவனை வெல்லுவீர்.

புலியுடன் உறவாடினால் ;-- அரசாங்க உதவிகள் பல கிடைக்கும்.

புலி தன்னை விரும்பினால் :-- அநந்தர சொத்துக்கள் கிடைக்கப் பெறுவீர்.

புலியை கொன்றால் :-- விடுதலை கிடைக்கும்:

புலியில் ஏறி விழுந்தால் :-- நிரந்தர நோய் விசேடமாக காய்ச்சல் பிடிக்கும்:

புலி இறைச்சியை உண்டால் :-- பொருள்களும் உதவிகளும் கிடைக்கும்.

புலியின் பாலை குடித்தால் :-- பகைமை தொலையும் பொருள் சேரும்.

புலிக்குட்டி :-- மனைவி ஆண் குழந்தை பெறுவாள்.

புழுதியைக்கண்டால்:-- அச்சமும் துக்கமும் பிடிக்கப்போகிறது

புறாவை கண்டால் ;-- தன்னிலை உயரப் போகிறது வாழ்வுக் காரணவாய்.

புறா மாமிசம் உண்டால் ;-- அறியாத பெண்ணொருத்தி நன்மைகள் புரிவாள்:

புறக் கூட்டம் :-- வியாபாரம் தொழில் துறைகள் அதிக பலன் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டைக் கண்டால் :-- நல்ல பணியாளும் பாதுகாப்புமாகும்.
பூட்டைத் திறந்தால் :-- சந்தோச காரியங்கள் நிகழும்.
பூட்டைப் பூட்டினால் :- கவலைகளும் எண்ணங்களும் அதிகரிக்கும்.
பூவை கண்டால் ;-- சந்தோச வாழ்வும் பார்வைத் தெளிவும் உண்டாகும்.

பூ சிவப்பு :-- ஆண் குழந்தை பிறக்கும் அறிவித்தல்.
பூ வெள்ளை :-- வாழ்வில் நிறைந்த நிம்மதி உண்டாகும்.
பூமியை கண்டால் ;-- எதிரி தோன்றுவான்; சச்சரவு உண்டாகும்.

பூமியை தோண்டினால் ;-- தந்திரமுயற்சியால் பொருள் சேர்ப்பவன்.

பூமியை தோண்ட நீர் கண்டால் :-- மிக இலகுவான வழிகளால் பொருள் சேரும்.

பூமியில் பொருளை மறைத்தால் :-- பிரயாணம் செய்வீர். பொருள் தவறி விடும்.

பூமியில் வீடு கட்டினால் :-- அச்சம் தீரும்; பொன்னும் பொருளும் புகழும் சேரும்.

பூமி சமானமானது : – செல்வச் செழிப்பையும் நல்வாழ்வையும் குறிக்கும்.

பூமி பாழானது :-- வழிகேடும், துன்யார்க்கமும், அழிவும் உண்டாகும்.

பூனையை கண்டால் :-- மோசம் செய்யும் கள்வனாகும்.
பூனை ஒரிடத்தில் புகுந்தால் :-- அங்கு கள்ளன் புகுவான்.
பூனை எதையாவது எடுத்து வெளியேறினால் : - அங்கு களவு போகும்.

பூனையை கொன்றால் :-- பகைமை ஒழியும்; நோய் தீரும்.
பூனையுடன் விளையாடினால் :-- நோய் பிடிக்கும்.
பூனை கடித்தால் ;-- நோய் கண்டிப்பாக வரும்; ஒரு வருடம் நீடித்து தொல்லை தரும்.

(.) (.) (.)

பெட்டகம் :-- சீர்மையான மனைவியையும் சிறப்பான வாழ்வையும் குறிக்கும்.

பெட்டி :-- காரிய சித்தியும் பகைமையை வெல்லவும் முடியும்.
பெண்ணைக் கண்டால் ;-- மகிழ்வான வாழ்வின் முன் அறிவிப்பு.
பெண் இயலாதவள் :-- இம்மை மறுமை வாழ்வு சிறப்பாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் குறி / தோள் :-- வறுமை பட்டினி திடீர் கஷ்டங்கள் ஏற்படும்.
பெண் கை :-- நல்லோர் சிலரின் உதவிகள் கிடைக்கும்.
பெண் சிறு நீர் பெய்தால் ;-- ஆசைகள் அதிகரித்து அலைச்சல் கூடும்.
பெண் நெற்றியில் முடி ;-- காதலால் வருந்த நேரிடும்.
பெண் ஆண் குறி ஒன்று இருந்தால் :-- மிகுதி துக்கம் ஏற்படும்.
பெண்ணிில் பால் அருந்தினால் :-- மனைவியில் அதீத அன்பு ஏற்படும்.
பெண்ணுக்கு தாடி :-- தந்தை பிரயாணமாவார் அல்லது மருமகன் கிடைப்பான்.

(.) (.) (.)

போர்வையை கண்டால் :- கற்புடைய நல்ல மனைவியை தெரிவிக்கும்:

(.) (.) (.)

மகள் பிறந்தால் ;- புத்திர பாக்கியத்தை அறிவிக்கும்.
மஞ்சள் கிழங்கு பழங்கள் : - நோயுண்டாகும் அறிகுறி.
மணலை கண்டால் :- அது சூடாக இருந்தால் வருவாய் பெருகும்.
மண் மாரி :-- நோய் கஷ்டத்தையும் சோதனையையும் குறிக்கும்.
மண் புழுதி, சேறு :-- இறை தண்டனை உண்டாகும்; நோய் நொடி வரும்.
மதுவைக் கண்டால்:-- பாவம் செய்யும் மோசக்கார மனிதன் உற்றதோழன் இறப்பான்; கௌரவம் குறையும்; செல்வம் அருகும்.
மதுவால் மயங்கினால் :-- தலைமை கிடைக்கும் பொருள் சேரும்.
மதுவுண்டு மயக்கம் :-- சொல்லொணாக் கவலைகள் வந்து சேரும்.
மந்தைகளை கண்டால் ;-- செல்வமுண்டாகும் அறிகுறி.
மந்தைகளை மேய்த்தால் :-- ஒரு கூட்டத்தின் தலைமை கிட்டும்.
மயிலைக் கண்டால் :-- அழகி மனைவியாவாள்; தலைமைப் பதவி ஒன்று கிட்டும்; செல்வம் சேரும்.
மரகதம் :-- சகல சௌபாக்கியமும் கிட்டும்; மாபெரும் ஞானியாவீர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தைக் கண்டால் :— ஆண் குழந்தை கிடைக்கும்; செல்வம் சேரும்; நற்குண நல்லொழுக்கமுடையவராக அமைதியாக வாழ்வீர்;

மரத்தில் இலையுதிர :— வறுமை அடரும் ஏழ்மை தொடரும்.

மரத்தில் பழமற்று வாசனையுமற்றிருந்தால் :— கண்டவன் உலோபித் தனமுடையவன்; எனவே தான தர்மம் செய்தால் உயர்வான்.

மரத்தில் வெட்டிய கிளை :— பிற்காலம் நல்ல மகிழ்விலும் அமைதியிலும் கழியும்.

மரத்தில் ஏறினால் :— திடீர் பிரயாணம் செய்ய நேரும். ஏறும் கஷ்டத்துக்கேற்ப முன்னேற்றம் ஏற்படும்.

மரம் முள்மரம் கனியுமில்லை :— நோய்கள் உண்டாகும்; கவலைகள் பிடிக்கும்.

மல் யுத்தம் நடக்க :— கவலைகள் உண்டாகித் தீரும்.

மல் யுத்தம் செய்ய :— வென்றால் வாழ்வில் வெற்றியும் நன்மையுமாகும்.

மல ஜலத்தைக் கண்டால் :— ஹறாமான பொருளும் பாவமுமாகும்.

மலம் கழிக்க கண்டால் :— உடல் நலனுக்காக செலவு ஏற்படும்

மலம் கழிப்பதை ஜனங்கள் கண்டால் :— அவமானங்கள் ஏற்படும்.

மலத்தை சுமந்தால் :— அதே அளவு ஹறாமான பொருளை பெறுவான்.

மலம் ஆடையில் பட்டால் :— துக்கமும் துயரமும் ஏற்படும்.

மலை மீது ஏறினால் :— விரோதியின் வெற்றியும் நபஸின் மீது ஆதிக்கமும் செலுத்துவான்.

மழை பெய்யக் கண்டால் :— விசுவாசமும் சந்தோசமும் பெருகும்.

மழை தேன் பாலாக பெய்தால் :— முதன்மையான விசுவாசி.

மழை தன் தலையில் மட்டும் பெய்தால் :— பாவம் செய்யும் மனிதன்.

மனித இறைச்சியை சமைத்துண்டால் :— ஹலாலான முதல்களை பெறுவான்.

மனித மாமிசம் பச்சையாக உண்டால் :— மனிதரை புறம் பேசுகிறவன்.

மனைவியை புணர்ந்தால் :— பெண்ணின் இரகசியத்தை வெளியிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காயை கண்டால் ;— புளித்தால் துக்கம்; இனித்தால் சந்தோசம்.

மாட்டைக் கண்டால் :— முழுமையான ஓராண்டை குறிக்கும்.
மாடு கொழுத்தது :— அவ்வாண்டு செழிப்பாக இருக்கும்.
மாடு மெலிந்தது :— அவ்வாண்டு பஞ்சமும் வறுமையும் உண்டாகும்.
மாட்டுப்பால், நெய், தோல், மலம் :— செல்வச் செழிப்பைக் குறிக்கும்.
மாட்டை அறுத்துப் பங்கிட்டால் :— அவ்வாண்டே மரணம் வரும்.

மாட்டின் கறியை உண்டால் :— ஏழை சீமானுவான்.
மாட்டின் பால் :— ஹலாலான முதல்கள் சேரும் அறிகுறி.
மாடு முட்டினுல் :— அவ்வாண்டே மரணம் ஏற்படும் அல்லது வேலை பறிபோகும்.
மாடு கட்டடத்தை முட்டினுல் :— அங்கு குழப்பம் விளையும்.
மாடு ஒரு தலத்தில் புகுந்தால் :— அங்கு கொள்ளை நோய் ஏற்படும்.
மாட்டின் சத்தம் கேட்டால் :— கேட்டவர் சங்கையானவர்.
மாடு கடித்தால் :— நோய் பிடிக்கும்.
மாட்டில் ஏறினுல் :— உத்தியோகம் உயர் பதவி கிடைக்கும்.
மாடு கன்றுத்தாய்ச்சி :— அவ்வாண்டுச் செழிப்பை அறியத் தருகிறது
மாட்டில் பெண் ஏறினுல் :— மணவாளனைப் பெறுவாள்.
மாட்டைக் கட்டிப் போட்டால் :— முதல் காப்பாற்றப்படும்.
மாட்டால் உழுதால் :— அதிக அருளையும் பொருளையும் பெறுவான்.
மாடு துரத்தினுல் : — உத்தியோகம் போகும்; நோய் வாய்ப்பட நேரும்.
மாடப் புறுவை கண்டால் :— மனைவியை அல்லது மகளைக் குறிக்கும்.
மாடியை கண்டால் :— உன் நிலைமையில் உயர்வு தோன்றும்.
மாதவிடாய் வரக்கண்டால் :— துக்கம் துயரம் உண்டாகும் அறிகுறி.
மாதவிடாய் நின்று விடக் கண்டால் :— குழந்தை கிடைக்கும்; பாவம் தீரும்; சந்தோசமான வாழ்வு கிடைக்கும்.
மாதவிடாய் கன்னிக்கு கண்டால் :— கன்னி அழிவாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவிடாய் வயதானவருக்கு :-- திருமணம் நடக்கும்;
மாதவிடாய் கிழவிக்கு கண்டால் :-- மரணம் முடுகி விட்டது;
மாதவிடாய் ஆணுக்கு கண்டால் ;-- விபச்சாரியாக மாறுவான்;
மாதுளைமரத்தைகண்டால் :-- இளம்பெண் திருமணம்செய்வாள்
மணந்தவர் கருப்பமாவாள், நல்ல வேலையாள் கிடைப்பாள்.

மாதுளம் பழம் :-- எதிர்பாராத சந்தோசங்கள் உண்டாகும், ஆண் குழந்தை பிறக்கும்.

மாதுளை புளி :- துக்கம் துயரம் உண்டாகும்.
மாதுளை இனிப்பு ;-- சந்தோசம் நிறைந்த நல்வாழ்வு கிட்டும்.
மாப்பிள்ளையாக தன்னை :-- அருளும் பொருளும் சேரும் அறிகுறி.

மாலிக் (அலை) (நரக அதிபதி) :-- கவலை சந்தோச நிலையில் கண்டால் கடன் தீரும்; கவலை அகலும்; பாவம் மன்னிக்கப்படும்; சிறையில் மீட்சி கிடைக்கும்.
மாலையை கண்டால் :-- அதிக நன்மைகள் உண்டாகும்.
மாலை தொங்கினால் : – கல்வியில் உயர்வீர்; தலைமை தாங்க நேரும்.

மாலை தனக்கு போடப் பட்டால் :-- தொழிலில் மிகுதி. சந்தோசம் கிடைக்கும்.

மாலையை ஒருவருக்கு போட்டால் : – அவரின் உறவும் அன்பும் கிட்டும்.

மாலை தன் கழுத்தில் கிடந்தால் :-- ஆறுதல் சந்தோசம் ஏற்படும் பெண்ணுடன் மணம் முடிப்பான்.
மரவைக் கண்டால் :-- உணவு கிடைக்கும்; கலியாணம் நிகழும் நோய் குணம் அடையும்; பிரயாணம் செய்வீர்.
மரவை அரித்தால் ;-- பாவ மன்னிப்புண்டாகும்; நேர்வழி செல்வீர்.

மானைக் கண்டால் ;-- அழகிய பெண்ணைக் குறிக்கும்.
மானை அறுத்தால் :-- கன்னியுடன் சேர்வான்.
மானை உரித்ததால் :-- விபச்சாரம் செய்வான்.
மானைத் தொடர்ந்தால் :-- வலிமையை பெற்றுக் கொள்வான்.
மான் குட்டி :-- பிள்ளை கிடைப்பதன் அறிவுறுத்தல்.
மான் வேட்டை :-- மிகுதி இம்மை இன்பங்களை பெறுவான்.

(.) (.) (.)

மிட்டாய் சொக்லேட் போன்றவை உண்டால் :-- சிறப்பும் மேன்மையும் உண்டாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிம்பர் (பிரசங்க மேடை) யை கண்டால் :-- உமது புகழ் பரவப் போகிறது:
மிம்பரில் பிரசங்கம் செய்தால் :-- நல்லடியாராஞல் சிறப்பும் மேன்மையும் அடைவார்; மற்றவர் இழிவடைவார்.
மிளகாயை கண்டால் :- கோபம் அதிகரிக்கும்; நோய் பிடிக்கும்
மிளகை கண்டால் :-- நோய் தீரும்; சந்தோச வாழ்வுண்டு.
மின்னல் பெரிதாக கண்டால் :-- அச்சமும் கவலையும் அதிகரிக்கும்.
மின்னல் சிறிதாக கண்டால் :-- சந்தோச சுகவாழ்வின் நன்மாராயம்.
மினுவைக் கண்டால் :-- அச்சம் தீர்ந்து நாட்டம் நிறைவு பெறும்.
மினுராவை கண்டால் :-- மேதைகள் பெரியார்களின் ஆசி கிடைக்கும்.
மிஹ்ராப் (தொழுமிடம்) ;-- சந்தோசமான சுபசோபனம் கிடைக்கும்.
மிஹ்ராபில் பெண் தொழுதால் :-- ஆண் குழந்தை கிடைக்கும் நற்செய்தி.
மிஹ்ராபில் சிறுநீர் பெய்தால் ;-- சாலிஹான ஆண் குழந்தை கிடைக்கும்.

(.) (.) ( )

மீனைக் கண்டால் :-- பெரியது சந்தோசம்; சிறியது நோய்.
மீனை உண்டால் ;-- எதிர் பாராத சந்தோசங்கள் ஏற்படும்.
மீனை சுமந்தால் ;-- ஹலாலான செல்வத்தை பெற்றுக் கொள்வாய்.
மீன் உயிருடன் விகாரமாக :-- தவறிய பொருள் வந்து சேரும்.
மீனுக்கு உணவளித்தால் :-- தேவைகள் நிறைவேறி மனத்திருப்தி உண்டாகும்.
மீனுடன் விதைத்தால் :-- கைவிட்ட கரியம் நடந்து முடியும்

(.) ( ) (.)

முகம் சூரியனைப் போல் இலங்கினுல் : - அதிகாரமும் செல்வமும் வலிமையும் கிடைக்கும்; நிரப்பமான சுகம் உண்டாகும்:
முகத்தில் மெல்லிய முடி :-- அநேக நன்மைகள் உண்டாகும் அறிகுறி.
முகமூடி :-- குடும்பத்தினரால் அதிக நன்மை அடைவீர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டையை கண்டால் :— நல்ல மனைவி அல்லது நல்ல புத்திரன் நன்பனைக் குறிக்கும்.
முடி வளரக் கண்டால் :— வாழுநாள் கூடும்; சீரும் சிறப்பும் உண்டாகும்; சுக ஜீவியாக வாழ்வீர்.
முடி சிவினுல் :— கவலைகள் நீங்கி விமோசனம் உண்டாகும்.
முடி வெட்டினுல் :— விவாக விடுதலையோ பதவி துறத்தலோ ஏற்படும்.
முடி இறக்கினுல் :— ஹஜ் அல்லாத காலமானுல் தரித்திரனுவான்.
முடி சிறிதாகினுல் :— உத்தியோக உயர்வு, தேக நலனை பாதிக்கும்.
முடி சுதம்பினுல் :— மனைவியை பிரிவீர்; பிரிவு குழப்பத்தில் முடியும்.
முடி உள்ளங்கையில் :— நோய் கவலை பிடிக்கும் அறிகுறி.
முடி கருமை :— தலைமைப் பதவி கிடைக்கும் அறிகுறி.
முடி வெள்ளை :— நீர் சணிஸ்யமும் கௌரவமும் பெறப் போகிறீர்.
முத்தமிடக் கண்டால் :— எண்ணம் நிறை வேறும் நற்பணி புரிவீர்.
முத்தை கண்டால் :— நல்ல மனைவி அல்லது மகளைக் குறிக்கும்.
முத்து மாலை :— மகள் பிறப்பதை தெரிவிக்கிறது அல்லது வேதம் மனனம் செய்த ஹாபிஸாயிருக்கும்.
மூத்தை எறிந்தால் :— ஞானம் பேசும் மனிதர்.
முதலையை கண்டால் :— குபாடம் செய்யும் சூதுக்கார மனிதன்.
முதலைக் கறியை உண்டால் :— பகைவனில் நின்றும் சொத்துக்களை பெறுவான்.
முதுகை கண்டால் :— எதிர்பாராத உதவிகள் கிடைக்கும்.
முயலைக் கண்டால் :— மந்த புத்தியுள்ள மனிதனுதம்.
முயலைப் பிடித்தால் :— சிறிதளவு செல்வம் சேரும்.
முள்ளங்கி :— ஹலாலான உணவு பொருள் சேரும் அறிகுறி.
முள்ளைக் கண்டால் :— உம் பாவங்கள் தீமைகள் அம்பலமாக போகிறது.
முள்ளம் பன்றியை கண்டால் :— கெட்ட பெண் அல்லது சபிக்கப்பட்ட ஆணாக இருக்கும்.
முள்ளம் பன்றியின் பாலைக் குடித்தால் :— ஒரு பெண்ணுல் ஏமோசம் செய்யப்படுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கை கண்டால் :-- நீண்டது ஆயுள் கூடுவதையும் சிறப்போங்குவதையும் குறிக்கும், குறியது துக்கம்.
மூக்கில் இரத்தம் ;-- ஹரூமான வழிச் செல்வம் சேரும்.
மூக்கில் முடி :-- கஷ்டம் கவலைகள் அதிகரிக்கும்.
மூக்கிரண்டு ;-- துக்கமான செய்தி வரும்; தலைமை தாங்க முடியாது போகும்.

(.) (.) (.)

மேகத்தை கண்டால் ;-- அறிவு, ஞானம், செல்வம் மேன்மை கிட்டும்.
மேகத்தை உண்டால் ;-- மருத்து வராவீர்; பெரும் புகழ் கிடைக்கும்.
மேகம் சூழ்ந்து கொண்டால் ;-- கவலையும் விசனமும் அதிகரிக்கும்.
மேகம் நிழல் தந்தால் :-- சிறப்பும் சங்கையும் உயரும்.
மேகம் கறுத்து இருள் மயமானால் :-- துக்கம் ஏற்படும் அறிகுறி.
மேகத்திலிருந்து தேன், பால், நீர் : - தீனில் நிரப்பமான மனிதன்.
மேகத்தை மக்கள் மிதித்தால் :-- அடிக்கடி மழை பெய்து நாடு செழிக்கிறது.
மேட்டில் ஏறுவது போன்றவை ;-- தீனிலும் வாழ்விலும் உட்ருவீர்.
மேட்டில் இருந்து இறங்கினால் :-- பதவி இறங்கும், சிறப்பு குறையும்.
மேளம் அடித்தால் :-- திருமணம் நிகழும், சிறப்புகள் கிட்டும்.

(.) (.) (.)

மோசக்காரி :-- மனைவியின் கூடாத தன்மைகளை அறிவிக்கும்.
மோதிரத்தை கண்டால் ;-- அதிகாரம் பெறுவதையும், ஆடு மாடு செல்வம் சேர்வதையும், ஆண் மகன் பிறப்பதையும் ஊழியன் வாய்ப்பதையும் குறிக்கும் நற்செய்தி.
மோதிரம்அணிந்தால்;- உத்தியோகம் கிடைப்பதை குறிக்கும்.
மோதிரம் விழுந்தால் :-- தொழில் போய் விடும்.
மோதிரம் வேறொருவனுக்கு அணிந்தால் :-; மனைவி விடுதலையாவாள்.
மோதிரம் கல்பதியாத தங்கமாக இருந்தால் :-- ஆணுக்கு தீமைகளும் பெண்ணுக்கு நன்மைகளும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மௌத்தான மையித்தை கண்டால் :— நீண்ட ஆயுள்; பொருளைக் அதிக்கும்.

மௌத்தான மையித்ஹயாத்தாக:—விளையத்துடைய அடியார்.
மௌத்தானவருடன் தானா;—வழிகேடும் அக்கமும் உண்டாகும்.
மௌத்தானவர் ஏதும் கேட்டால் :— கஷ்டங்கள் உண்டாகும்.
மௌத்தானவன் பின்னே போனால் :— மரணம் வரும்.
மௌத்தானவன் பின்னே போய் மீண்டால்; சுகவாழ்வுண்டாகும்
மௌத்தானவனுடன் சேர்ந்து போனால் :— பிரயாணம் ஏற்படும்.
மௌத்தானவர் முகம் கறுப்பாக இருந்தால் :— காணப் பட்டவர் பாவி;

மௌத்தானவர் ஏழையாக :— அவர் நன்மை குறைந்தவர்.
மௌத்தானவர் நிர்வாணமாக :— பாவமோ நன்மையோ அற்றவர்.

மௌத்தானவர் அழகிய ஆடையுடன் :— அவர் நிலை நன்மையாக உள்ளது.

மௌத்தானவர் கோபித்தால் :— அவர் கூறிய வசீயத்து நிறைவேறவில்லை.

மௌத்தான மகன், தந்தை சிரித்திருந்தால் :— ஜெயமும் நலமும் உண்டு.

மௌத்தானவன் மனைவி சிரித்திருந்தால் :— ஏழையாகி விடுவான்.

மௌத்தானவன் இரண்டாம் தாரம் மரணித்தால் :— ஒருவரின் மணத்தை குறிக்கும்.

மௌத்தாகி அடக்கினால் :— வழிகேடு உண்டாகும்; அல்லது பட்டணம் நிரம்பும்.

மௌத்தானதாக ஹயாத்தானவனைக் கண்டால் :— ஆயுள் நீடிக்கும்; காணாமல் போனவன் பற்றிய தகவல் கிட்டும்.

மௌத்தானதாக மனைவியை :— தலாக்காவாள் அல்லது மரணமாவாள்.

மௌத்தானதாக மகனை :— மணம் முடிப்பாள், அல்லது மரணிப்பாள்.

மௌத்தின் ஓலம் கேட்டால் :— திருமணம் நடக்கும்.
மௌத்தான மையித்து தன் கழுத்தில் கட்டப்பட அல்லது தான் அதனுடன் பேச அல்லது தன்னை வெட்டக் கண்டால் :— ஹயாத்து வாழ்க்கை நீளமாகும் அறிவித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையை கண்டால் :— இது அரசாங்கத்தையும் பாவம் வழி கேடுகளையும் குறிக்கும்.
யானை மீது சவாரி ;— அரசாங்கத்தில் பதவிகள் கிடைக்கும், ஆனால் உன் மனைவி விடுதலையாவாள்.
யானை தன்னைப் பிடித்தால் :— அரசாங்க ஆபத்துக்கள் உண்டாகும்; நோய்கள் பிடிக்கும் அல்லது மரணமே சம்பவிக்கலாம்.
யானை குட்டியை கண்டால் :— அரசாங்கத்தில் சிறு பதவி கிடைக்கும்.
யானைக் கறியை தின்றால்:— தின்ற அளவு முதல்களும் பதவியும் அரசாங்கத்தால் கிடைக்கும்.
யானையில் பால் கறந்தால் :— ஆகாத வழிப் பொருள் சேரும்.
யானை ஊரை விட்டுப் போனால் :— ஊரில் நோய் நொடி தீரும்.
யானை மீது தொப்பி :— ஓரழகியை மணப்பீர்.
யானை மதம் :— துன்பம் தொல்லைகள் தொடரும்.
யானை வெள்ளை :— நற்புத்திரர் கிடைப்பார்; செல்வம் சேரடையும்.

(.) (.) (.)

யுத்தம் :— தீமைகளை விட்டு விலகுவீர்.
யுத்தத்தில் கலந்து கொண்டால் :— பெரும் புகழும் ஏற்படப் போகிறது.
யுத்த ஆயுதபாணியாக தன்னை கண்டால் :— தலைமை பதவிகள் கிடைக்கும், பல வெற்றிகள் தங்களை நாடி வரும் அறிகுறிகள்.

(.) (.) (.)

லச்சிரம் :— ஆகுமான நல்ல முதல்கள் சேரும் அறிகுறி.
வண்டு :— விரோதி அல்லது ஆகாத வழிச் செல்வம்.
வயிரம் :— சொல்லரிய சிறப்புக்களும் நன்மையும் உண்டாகும்.
வயிறுபங்ளிகுபோல் :— அழகான சந்ததியினர் தோன்றுவர்.
வயிறு குடலில்லாமல் :— உறவினரையும் நாட்டையும் பிரிவீர்.
வயிற்றின் குடலை கண்டால் :— தனபாடம்; பொருள், சந்ததியினரை குறிக்கும்.
வயிற்றைக் கண்டால் :— முதல்களைக் குறிக்கும்.
வயிற்றில் புழுக்கள் :— அருள் நிறைந்த குடும்பம்.
வயிற்றை பிளந்து சுத்தி செய்து மீட்டினால் :— இறை பொருத்தமான வழியில் உள்ளவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிபரைக் கண்டால் :-- பிரயாணம் சுகமே முடியும்.
வயோதிபன் வாலிபனானால் :-- தலைமைப் பதவி கிடைக்கும்.
வரிக் குதிரையை கண்டால் :-- செல்வத்தின் பேரில் அறிவிக்கும்.
வரிக்குதிரையில் சவாரி :-- எஜமானின் பெண் சாதி சதி செய்வாள்
வரிக் குதிரையின் இறைச்சி :-- எதிர்பாராத செல்வம் சேரும்.
வரிக் குதிரையில் ஏறினால் :-- ஆயுள் கூடும் சந்தோசம் பிறக்கும்.
வலையை கண்டால் :-- சங்கை பெற்ற மனிதனுக்கும்; இல்லசான சோதனைகளுக்கு உடபடுவான்.

வழிகாட்டி :-- ஞானசிரியர் கிடைக்கப் பெறுகிறார்.
வழிபறிக் கொள்ளை :- கூடாத மகளிர் உறவேற்படும் அல்லது பெண்ணுடன் சச்சரவு ஏற்படும்.

(.) (.) (.)

வாசனைத் தூபம் ;-- பொருள் கிடைக்கும்; நல்வாழ்வு கிட்டும்.
வாத்தை கண்டால் :-- மேலதிகாரிகளால் பயனை அடையப் போகிறீர்.

வாந்தி :-- பாவ மீட்சி கிடைக்கும் அறிவித்தல்.
வாலிப மகன் :-- விரோதிகளால் தண்டிக்கப்படுவீர்.
வாலிபன் வயோதிபனாக :-- ஞான முதிர்வு உண்டாகும்; நன்மைகள் கிட்டும்.

வாலிபன் சிறுவனானால் :-- உன் முயற்சிகள் முதிர்வடையாது.
வாளைக் கண்டால் :- பகைமையை வெல்லுவீர் ஆனால் பதவி போய் விடும்; சந்ததி குறைவர்; அல்லது மனைவி தலாக் ஆகலாம் தேவையற்ற கவலைகள் சூழும்.
வாளைக் கையில் கண்டால் :-- பதவியும் புகழும் உண்டாகும்.
வாளை உறையில் கண்டால் ;-- கருப்பத்தில் பெண் குழந்தை இருக்கிறது.

வாளை முறிந்திருக்க கண்டால் :-- குழந்தை வயிற்றில் மரித்து விட்டது.

(.) (.) (.)

வான் கோழி :-- உயர் பதவிகள் பெறவும் பெரும் செல்வந்தனாகவும் சந்தர்ப்பம் உண்டு; ஆனால் சில தடங்கல்கள் வந்து எதிர்க்கும்; அச்சந்தை வெற்றி பெறுவீர்.

வானத்தைக் கண்டால் ;-- உயர் பதவிகள் உம்மை வந்து சேரும்.

வானத்தில் வாசல் :-- பாவமன்னிப்பும் துஆ கபூலாவதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் ஒளிப்பிளம்பு :- நேர் வழியும் இருமை நலன்களும் உண்டு.
வானம் வெளுத்திருந்தால் :-- தண்ணீரால் மிகுதி பயன் உண்டாகும்.
வானம் தன்னைச் சுற்றினால் :-- பிரயாணம் செய்ய நேரிடும்
வானவரைக் (மலக்குகளை) கண்டால் :-- பெரிய மனிதனாக மதிக்கப்படுவீர்; உப்பால் ஞானம் பெருகும்; நோய் கஷ்டங்கள் விலகும்.
வானவருடன் வாதம் :-- மரணம் மிகச் சமீபத்தில் உண்டு.
வானவர் சூழ்ந்திருந்தால் --: கொள்ளை ஒன்று நிகழவுள்ளது; ஜாக்கிரதையாக இருக்கவும்; இறை பாதுகாப்பையும் வேண்டுக.
வானவர் கூட்டம் :-- கருவிலே திருவுடைய பெரியார் இறப்பார்.
வானவில் --: விளைச்சல் குறையும்; நோய் கவலை அதிகரிக்கும்.

(.) (.) (.)

விக்கிரகம் :-- கண்டவன் மார்க்கத்தில் பொய்யுரைப்பவன்.
விகாரமான கிழவி :-- துன்யா (உலக) ஆசைகள் மிகும்; அதனால் ஆன அலைச்சல்கள் மிகுந்து நெருக்கடிகள் உண்டாகும்.
வித்துக்களாலான மருந்து :-- மார்க்க ஞானம் உயரும்.
வியாதியாளனாக தன்னை --; பக்தி குறையும்; நோய் பிடிக்கும்
வியாதி குணமடைய கண்டால் --: நோய் குணமடையும்
வியர்க்க கண்டால் -: எண்ணங்கள் மெல்ல மெல்ல நிறைவு பெறும்.
விரலை அழகாகக் கண்டால் --: பிரிந்த ஒருவரைச் சந்திப்பீர்; சந்ததியினர் நல்வாழ்வு வாழ்வர்.
விரலை அதிகமாக --: நோக்கம் பிழைக்கும்; கவலை அதிகரிக்கும்
விரல் பிரிந்திருந்தால் :-- உதவிகள் குறைந்து அச்சம் அதிகரிக்கும்.
விரல் வெட்டப் பட்டால் :-- கவலையும்தொல்லையும்அதிகமாகும்.
விரலில் நோய் : வணக்க வழிபாடுகளில் அசட்டை செய்வோன்
விரிப்பைக் கண்டால் :-- நற்குண முள்ள மனைவி.
விரிப்பில் உண்டால் :-- வாழுநாள் கூடும்; செல்வம் பெருகும்.
விருந்து கொடுக்க கண்டால் :-- அதில் உறைப்பு அதிகமாக இருந்தால் கண்டவன் மோசமான மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதியை முத்தினால் :— பகைமை நீங்கி உறவு பெருகும்.
விரோதி தன்னைக் கண்டு ஓடினால் :— துக்கம் அகலும் எண்ணம் நிறைவு பெறும்.

விரோதி தலையை வெட்டினால் :— உம்மை அபாயம் காத்திருக்கிறது.

வில்லை இழுத்தால் :— செய்யும் பிரயாணம் நலவாய் முடியும்;
வில் வளைவக் கட்டினால் :—, உமக்கு ஆண் பிள்ளை பிறக்கும்;

விலாவை கண்டால் :— ஒரு இளம் பெண்ணுடன் உறங்குவீர் அதனால் அதிக சந்தோசங்களை பெறுவீர்

விலா எலும்பு :— நீண்ட ஆயுளும் செல்வமும் சேரும்.
விலா முறிந்தால் :— துயரமும் கவலையும் அதிகரிக்கும்; மனைவியை பிரிய நேரும்.
விவாகம் செய்யக் கண்டால் :— பெண்ணின் நிலைக்கேற்ப உன் வாழ்வு அமையும்.
விவாக உடையவும் :— வறுமை நோய் நீங்கும்; செல்வம் சேரும்.
விவாக ஊர்வலம் :— கண்டவர் பெண்ணானால் சந்தோசம் உண்டாகும்; ஆணானால் சலிப்பு வரும்.
விவாகத்தில் தன்னை மாப்பிள்ளையாக கண்டால் —: சகல சௌபாக்கியங்களும் பெற்று சுருலகிலும் சந்தோசமாக வாழ்வீர்.

விளக்கை கண்டால் :— வாழ்வில் உயரும் சந்தர்ப்பம் இது.
விளக்கொளி :— சுபகாரியங்கள் நிகழும்; வாழுநாள் கூடும்.
விளக்கு விட்டில் (பூச்சி) :— உடலை உருக்கும் தொல்லைகள் வரும்.
விளக்கு வைக்கும் மாடம் :— சுகசீவியமும் நல்வாழ்வும் கிட்டும்; உமது மனைவியால் சொல்லரிய நலன்களைப் பெறுவீர்.

(.) (.) (.)

வீட்டைக் கண்டால் :— அச்சமற்ற சீவிய செல்வங்களை குறிக்கும்.
வீடு அகலமாக கண்டால் :— செல்வப் பெருக்குண்டாகும்;
வீடு மாடியாக :— மனைவி கருப்பமாக இருக்கிறாள்; உன் தகுதியும் உயரப் போகிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு பெரும் மாடி --: நினையாப் புறத்தில் செல்வம் சேரும்.
வீட்டின் கதவு --: நல்ல மனைவி வாய்க்கும் அறிகுறி.
வீட்டுக்கு வட்டமான கதவு :-- அரச தூதுவர் ஆகுவீர் அல்லது பெரும் தொழில் அதிபராக மாறுவீர்.
வீட்டின் கதவு மிக அகலம் :-- உணவில் விஸ்தாரம் கிட்டும்.
வீட்டின் கதவு அடைக்கப் பட்டால் :-- தரித்திரம் பிடிக்கும்.
வீட்டுக் கதவில் பூட்டு / சங்கிலி :-- விசுவாசமான ஊழியன்.
வீட்டின் வெளியே கதவு :-- கெட்ட பெண் உறவுள்ளவர். எனவே இறைவனை அஞ்சி வாழ்க.
வீட்டை சித்திர அலங்காரம் செய்தால் :-- வீண்பழிகளும் சண்டைகளும் ஏற்படும்.
வீட்டில் நுழைந்தால் : - அச்சம் தீரும்; பகைமை ஒழியும்.
வீடு எரிந்தால் :-- அரசாங்க உதவிகள் கிடைக்கும்.
வீடு இடிந்து விழுந்தால் : ஒருவரின் மரணத்தைக் குறிக்கும்.
வீட்டில் மரம் போன்றவை விழுந்தால் :-- மரணம் ஏற்படும்.
வீடு பனிக்கட்டியால் அழிந்தால் :-- வீட்டார் மரணித்தழிவர்.
வீடு அறிமுகமில்லாதது : - நோய் நொடி பிடிக்கவும் துக்கம் ஏற்படவும் காரணமாகும்.
வீடு கட்டினால் :-- அச்சம் தீரும் புகழ் எங்கும் பரவி நல்வாழ்வு வாழ்வீர்கள்.
வீடு போன்ற கூடாரம் :-- தலைமைப் பதவி கிடைக்கும்; கன்னிப் பெண்ணை மணப்பீர்.
வீடு சந்திரம் போல் சி--ந்திருந்தால் :-- துக்கம் பிடிக்கும்; நோய் வாய்ப்படுவீர்.
வீட்டில் நீருற்று :-- அவ்வீட்டில் பாவச் செயல்கள் அதிகரித்து விட்டது; அழிவும்மரணமும் -ற்படுவதற்கான எச்சரிக்கை.

(·) ( (·)

வெள்ளி (உலோகம்) கண்டால் --; பெண்களின் வலைகளில் சிக்கித் தவிப்பீர்; அலைச்சல் அதிகரிக்கும்.
வெள்ளி இடைத்தால் --; துக்கம் துயரம் விலகி நல்வாழ்வு கிடைக்கும் அறிவித்தல் இது.
வெள்ளியை கொடுத்தால் -: ஒரு பெண்ணால் ஏமாற்றப் படுவீர்; முன் எச்சரிக்கையாக இருக்கவும்,
வெள்ளித் துண்டு --: அழகிய பெண்ணை சந்தித்து ... சந்தர்ப்பம் ஏற்படும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியை உருக்கினால் :-- விரோதிகள் சூட்சி வலையில் சிக்குவீர்; எதற்கும் இறைவனை வேண்டி முன் எச்சரிக்கையாக நடந்து கொள்க.

வெள்ளிக் காசு :-- நனவில் அது கிடைக்கும்; கண்ட படி குழந்தைகள் கிடைப்பர்.

வெள்ளி உதவாதது :-- கை முதல் கரைந்து தரித்திரனுவீர்; கவலைகள் தலை எடுக்கும்.

வெள்ளிப் பல் ;-- கவலைகள் அதிகமாகி கஷ்டப்பட நேரிடும். தேக நலம் குன்றி வருந்துவீர்.

(·) (·) (·)

வேட்டையாடக் கண்டால் :-- எண்ணங்கள் நிறை வேறும் சிறந்த மனைவி கிடைப்பாள்.

வேளாண்மையை கண்டால் :-- செல்வமும் சிறப்பும் மகிழ்வும் ஒன்று சேரும் அறிவிப்பு.

வேளாண்மை செய்யக் கண்டால் :-- சமய சமூகத் தொண்டராவீர். வாழ்வும் வளமும் சிறந்தோங்கும்.

வேளாண்மை வளத்திடையே கண்டால் : - புதுப்புது விரோதிகள் தோன்றித் தொல்லைகள் செய்வர்; இறைவனை வேண்டுக.

வேளாண்மை நிறைந்த பெரும் வயல் வெளி :- அறிவு ஞானம் பெருகும், செல்வநிலை உயரும்; உயர்ந்தவராவீர்.

வேளாண்மை தரையை உழுதால் :-- பணக்காதலன் மணப்பான்; மணந்தவன் சந்ததி பெறுவான் சந்தோச வாழ்வுண்டாகும்.

வேளாண்மை அறுவடை :-- கொலை ஒன்று நிகழும் அல்லது மனைவி பிரிவாள்.

(.) (.) (.)

வைக்கோல் ;-- நன்மையாகும். முதலையும் தங்கத்தையும் குறிக்கும்.

(·) (·) (·)

வௌவாலைக் கண்டால் :-- அதிக நன்மைகள் புரியும் ஆபீது (வணக்கவாளி) ஆகும். இவன் ஹான் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடி நூல்

உச்சி துடித்தால் :-- கஷ்டங்கள் நீங்கி கைதுண்டாகும்; பெண்ணுனல் திருமணம் நிகழும்; சிறப்புண்டாகும்.

தலையின் வலப்புறம் துடித்தால் :- சலிப்பான காரியம் ஒன்றுண்டாகித் தீரும்; தூரபிரயாணம் நிகழும்.

தலையின் இடப்புறம் ;-- மேன்மையான சிறப்பான கருமங்கள் உண்டாகும்; நீங்காத எண்ணம் பிடிக்கும்.

நெற்றி எப்புறம் துடித்தாலும் :- பெருமை, உயர்வு நல்வாழ்வு கிடைக்கும் நன்மாராயம்.

பொய்க் கண் வலப்புறம் ;- பொருள் பெருகி சந்தோசம் உண்டாகும் நன்மாராயம்.

பொய்க் கண் இடப்புறம் :-- நோய்வாய்ப்பட்டு குணமடைவீர்.

புருவம் வலப்புறம் :-சில ப[illegible] விசளு[illegible] ளிதரிடையே கௌரவமும் கிடைக்கப் போகிறது.

புருவம் இடப்புறம் :-- உறவினரோடு வழக்காடி பொருள் அழியும்.

புருவம் இரண்டும் ; - பதவிகள் கிடைக்கும் முன்னறிவிப்பு.

கண் இமை வலம் மேல் ; - சலிப்புண்டாகி நீங்கும்.

கண் இமை வலம் கீழ் : - துக்கம் [illegible]ண்டாகும் அறிகுறி.

வலது கண் துடித்தால் ; - குழப்பம் உண்டாகும்; ஜெயம் பெறுவீர்.

இடது கண் மேல் இமை : - பிரயாணி சுகமே மீளுவான்; நலமுண்டு.

இடது கண் கீழ் இமை : - அதிக நன்மைகள் உண்டாகப் பெறுவீர்.

காது வலப்புறம் --: மிகுதி நன்மைகள் உண்டாகப் போகிறது.

காது இடப்புறம் -- : அறி[illegible]ப் புறந்[illegible]ல் உணவு கிடைக்கும்.

மூக்கு வலப்புறம் -- எண்ணங்கள் நிறைவேறும் காலம் வந்து விட்டதற்கான அறிகுறி.

மூக்கு இடப்புறம் :-- நோய் உண்டாகும் அறிகுறி.

மூக்கு உள்ப்புறம் :-- கவலைகளை விட்டும் விடுதலை உண்டாகப் போகிறது.

மூக்கு முழுவதும் :-- [illegible] நன்மையுண்டாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதடு மேல் :-- சண்டை வழக்குண்டாகி தீரும்;
உதடு கீழ் :-- பிரயாணி சுகமே திரும்புவான்.
உதடு இரண்டும் :-- பகைவன் இணங்கி வருவான்.
நாக்கு :-- தலைமைப் பதவியொன்று கிடைக்கும்; வழக்குண்டாகி கஷ்டம் தரும்.
கழுத்து வலப்புறம் :-- கஷ்டம் உண்டாகும்.
கழுத்து இடப்புறம் ;-- செல்வமும் நல்வாழ்வும் உண்டாக இருக்கிறது.
கழுத்து முழுவதும் :-- கெட்ட வியாதிகள் பிடிக்கும் அறிகுறி
புயம் இரண்டும் :-- அநேக நன்மைகள் கிடைக்கும்
வலப்புற உள்ளங்கை :-- கஷ்டப்பட்டு பொருள் சேரும்.
இடது உள்ளங்கை :-- தலைமை பதவியும் பொருளும் சேரும்.
வலதுகை பெருவிரல் ;-- அரசாங்கத்தில் கௌரவமும் மதிப்பும் ஏற்பட இருக்கிறது.
வலதுகை கலிமாவிரல் ; -- இவனைப் பற்றிய ஒரு செய்தி பரவும்; உணவில் பரக்கத்துண்டாகும்; களவுபோன பொருள் மீளும்;
வலதுகை நடுவிரல் ;-- வழக்கொன்று உண்டாகும்.
மோதிர விரல் :-- மனித சமூகத்தில் நற்பெயர் உண்டாகும்.
சின்ன விரல் ;-- அநேக நன்மைகள் விளையும்; தோழன் மரணிக்கப் போகிறான்; இன்னும் சில சலிப்புகள் உண்டாகித் தீரும்.
கை முழுவதும் துடித்தால் ; - வெளிநாடு போவான்.
நெஞ்சு துடித்தால் ;-- முடிவுகாலம் நெருங்கி விட்டது; நோயாளி மரணம் அடைவான்.
தொடை வலது :-- அருளும் பொருளும் சேரும் அறிகுறி.
தொடை இடது ;-- வழக்கொன்று உண்டாகி வெற்றியும் தரும்
கெண்டை வலது --; ஆகாத முதல்கள் சேரும்.
கெண்டை இடது - : வாணாள் அதிகரிக்கும்.
பாதம் வலது :- பொருள் அழியும் மிடுமை தொடரும்.
பாதம் இடது ;-- சிறப்பும் சங்கையும் பெறப்போகிறீர்; தூர பிரயாணம் செய்ய நேரும்; அதனால் அதிக சந்தோசம் உண்டாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின்
# ஏனைய வெளியீடுகள்.

★ **மாணவர் இலக்கணத் தெளிவு :**

இது இலக்கணம் சம்பந்தமான சகல பிரச்சினைகளையும்
இலகுபடுத்தி விடுவித்து, 5ஆம் வருடம் முதல் 11 ஆம் வருடம்
வரையுள்ள மாணவர்களுக்கு பொதுவாகவும் O/L பரீட்சைக்கு
தோற்றுவோர்க்கென விசேடமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

★ **கதைக் கொத்து :**

பயிலும் மாணவர்களுக்கும்; பயிற்றும் ஆசான்களுக்கும்
மேடைப்பிரசங்கிகள், எழுத்தாளர்கள்; கட்டுரையாளர்களுக்
கென்றே விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ள புத்தி புகட்டும்
கதைத்துணுக்குகள் முற்றிலும் நிறைந்தவை.

★ **பழமொழித் திரட்டு :**

கடுகைத் துளைத்து ஏழு கடலை புகுத்தியது போல் சகல பழமொழி
களையும் தன்னகத்தே கொண்ட ஒரு சிறு கைநூல்;

★ **சொர்க்க நீதி ;**

இளூர்கட்கேற்ற பாடல்களும் பெரியோர்க் கேற்ற போதனைகளும்
தன்னகத்தே கொண்டது; முற்றிலும் பாடலாலானது.

★ பிஸ்மிலின் மகிமையும் சலாமின் சங்கையும்.

★ அல்லாஹ்வை அறிவது எப்படி?

★ திக்று செய்வோம் வாரீர்!

★ தன்னை அறியும் விந்தை.

★ மஃரிபாவின் இறுதி முடிவென்ன?

★ ஹதீஸ் மணிக்கோவை.

★ குணங்குடியார் என்ன கூறுகிறார்?

★ மூட நம்பிக்கைகள்.

★ மானம் உயிர் பொருள்.

★ செய்கு இல்லாதாருக்கு செய்கு சைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org